
1232

...o. M. 2210 வருஷ சந்தா ரூ. 1-8-0

PROPRIETOR } வை. மு. கோதைநாயகி அம்மாள்
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR.)

# JEGAN MOHINI

மலர் VI ஜகன்மோகினி இதழ் 6



தனிப் பிரதி அணா 3.

182857

ஜகன்மோகினி ஆபீஸ்,
26, தோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகைவெளியாகும்

கெட்டி சாயம்! உயர்ந்த உடை !! விலை நயம் !!!

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

## கலர் புடவைகள்

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. செம்புரோஸ், ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி.

அளவு 18 × 2¾ முழங்கள்.

முதல் ரகம் விலை ரூ. 5-0-0 2-வது ரகம் ரூ. 4-0-0

பூக்கொடிக்கரை நெய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

சாதா: மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும். பெங்களூர் முந்தாணி போட்டது. கலர் கெடாதது. மனோகரமான மழமழப்பு. பளபளப்பு மாறாதது. ரம்மியமான தோற்றமுள்ளது. நேர்த்தியான நெசவு கொண்டது. நீடித்து நிற்பது. உறுதியானது.

18 × 2¾ முழங்கள் விலை ரூ. 11-0-0

ரவிக்கை துண்டு 1-க்கு 0-11-0

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக்கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார் முதலிய தினுசுகள்.

18 × 2¾ விலை ரூ. 11-4-0

ரவிக்கை 1 முழம் 0-12-0

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்ய உருப்படி 1-க்கு 3-0-0 அதிகம்.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம். ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால் பங்கு முன் பணமனுப்புக. தபாற் கூலி வேறு.

ஒரே சமயத்தில் 100 ரூபாய் சரக்கு வாங்குபவர்க்கு 1 ரூபாய்க்கு 0-1-6 வீதம் குறைக்கப்படும்.

ஸிட்டி நெசவுச் சாலை,

65, அரமனைக்கார வீதி,

ஜீ. டி. சென்னை.

ஏஜண்டுகள் தேவை.

OFFICE OF THE REGISTRAR 2 NOV 1929 MADRAS

# முக்கிய அறிவிப்பு

5-வது இதழில் தெரிவித்தபடி நமது நூலாசிரியரின் தேக நிலைமை பூர்ண சுக மடையாது மத்தியில் சிறிது குணமடைவது போலிருந்து மறுபடியும் மிகவும் துர்ப்பல மடைந்திருக்கிறது. இது காரணம் பற்றியே இந்த 6-வது இதழை வெளியிட சில தினங்கள் தாமத மாயிற்று.

இம்மாதிரி எதிர்பாராது நேரிடும் சந்தர்ப்பங்களிலுண்டாகும் தாமதத்தை உத்தேசித்தே நாம் 10 தேதிக்குள் சஞ்சிகை வராவிட்டால் நமக்குத் தெரிவிக்கும்படிச் சந்தாதார்களைப் பல தடவைகளில் கேட்டுக் கொண்டும் சிலர் 2-3 தேதிக்குள்ளாகவே ஞாபகக் கடிதங்கள் எழுதிவிடுகிறார்கள். **நமது சஞ்சிகையைக் குறித்த தேதியில் அனுப்பி நமது சந்தா நேயர்களை மகிழ்விக்க வேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கம்.** அப்படியிருந்தும் நம்மை மீறி ஏற்படும் அசந்தர்ப்பங்களினாலுண்டாகும் தாமதத்திற்கு நாமே மிகவும் வருத்தமடைகிறோம். நமது நூலாசிரியர் பூர்ண சுக மடைகிறவரையில். நமது சஞ்சிகை வெளிவர சில தினங்கள் தாமதமாகுமாயின் நமது அன்பார்ந்த சந்தா நேயர்கள் தயவு செய்து பொறுமையுடன் மன்னித்து, நமது பத்திரிகையின் மீதுள்ள அபிமானம் குன்றாமல் என்றும் போல ஆதரிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

ஏற்கெனவே நாம் தெரிவித்தபடி **"கோபால ரத்னம்" "மாதவமணி"** இரண்டும் நமது சொதந்ப் பிரசுரங்களல்லவாதலின் நாம் சந்தா நேயர்களுக்காக விலையைக் குறைக்க முடியாது. ஆயினும் ரூ 1—1—0 **முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.** நமது கைவசம் சொற்ப காபிகளே இருப்பதால் வேண்டியவர்கள் உடனே முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

**மானேஜர்.**

# A WORD
## TO
# Authors and Publishers

If your finish and get up is good,
make it Better with
Illustrations from

**R. V. Raman Bros.**

Illustrators, designers, Half Tone and Line
block makers, Lantern slide
makers, oil painters,
bromide enlargers
photographers &c.

***Satisfaction a Guarantee***
***Charges moderate***

# R. V. RAMAN BROS.

***22, Broadway, MADRAS.***


---

## பரிசுகளின் விவரம்.

ஐந்தாவது சஞ்சிகைக்குப் பிறகு பணம் அனுப்பியவர்களில் கீழ்க் கண்டவர்களுக்கு பரிசுகள் விழுந்திருக்கின்றன.

சந்தா. ந.

4327 Mr. K. V. T. Row, Triplicane.

4339 Mr. K, Devaji Row, M. A., Madura.

மேற்கூறியவர்கள் தமக்கு வேண்டிய புத்தகங்களைத் தெரிவித்தால் அனுப்புகிறோம்.

அடுத்த சஞ்சிகை வெளியாவதற்குள் சேரும் சந்தா நேயர்களுக்கும் 5-ரூபாயில் இரண்டு பரிசுகள் கொடுக்கப்படும்.

# மதிப்புரை.

## கோபால ரத்னம்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட கோபாலரத்னம் என்னும் தமிழ் நாவல் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. வரதக்ஷிணையின் கொடுமையை எடுத்துக்காட்டும் முக்கிய நோக்கத்துடன் இந்த நாவல் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கதையின் ரஸம் ஒரு வழியிலும் குறைந்துவிடவில்லை. இதைக் காதற் கடிதக் களஞ்சியம் என்றே கூறலாம். கோபாலனின் பெற்றோர்கள் பெண்வீட்டுக்காரர்களிடம் பணம் வாங்கவேண்டுமென்ற பேராசையின் பயனாகச் செய்யும் கொடுமைகளும் அதனால் கோபாலனும் அவன் மனைவி ரத்னாம்பாளும் உட்படும் சகிக்கமுடியாத கஷ்டங்களும் எவர் மனதையும் உருக்கி அவர்களை வரதக்ஷிணைக்கு எதிராக வேலை செய்யுமாறு தூண்டிவிடும். நமது சமூகத்திலுள்ள பல ஊழல்களையும் ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள் வெகு நன்றாக எடுத்துக்காட்டிப் படிப்போர் மனதில் சீர்திருத்த உணர்ச்சி தானாகவே தோன்றுமாறு செய்திருக்கிறார். உண்மைக் காதலின் உறுதி இதில் நன்கு விளங்குகிறது.

—சுதேசமித்திரன். 28—6—1929

---

இதுவும் ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட புதிய நாவலாகும். ஆசிரியர் எழுதுவது இது புது நூலாகாது. அவர் பல நாவல்களை எழுதியிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம். இதில் வேலையில்லாத் திண்டாட்டம், வரதக்ஷிணையின் கேடுகள், அன்புடைய காதலர் பிரியுங்கால் அடையும் கஷ்டம், உத்தம சகோதர வாஞ்சை முதலிய விஷயங்களையும், கஷ்டங்களை அனுபவிக்கும் முறையையும் செவ்வனே விளக்கி ஆசிரியர் எழுதியிருக்கிறார். நவீன காதலர்கள் அன்பு மிகுந்து எழுதும் கடிதங்கள் படிப்பவர் மனதைக் கவரும்படி எழுதப் பட்டிருக்கின்றன. இந்நாவல் இனிய செந்தமிழ் நடையில் சந்தர்ப்பங்களுக் கேற்ற அரிய பழமொழிகளைக் கொண்டும் பெண்மணிகட்கு தற்கால நாகரிக மயக்கத்தால் விளையும் கேடுகளும் செவ்வனே எழுதப்பட்டுள்ளது. இத்தகைய நாவல்களை பெண்கள் படிப்பதால், அறிவும், அடக்கமும், தானாகவே உண்டகும் என்பதற் கைய மில்லை.

தமிழ்நாடு. 23—6—1929

---

'ஷண்பகவிஜயம்', 'கௌரீ முகுந்தன்' என்ற தனி நாவல்களைப் போன்றவைகளில் ஒன்றாக ஆசிரியர் இதனை எழுதியுள்ளார்கள். வரதட்சிணையின் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், காதலர் கவலை, அன்பின் மாண்பு இவை மிகவும் போற்றத்தக்க விதமாகப் பொலிகின்றன. ரஸம் ததும்பும் இனிய நடையில் எழுதியுள்ள இக் கதை ஜன சமூகத்திற்கே ஒரு உணர்ச்சியைக் கொடுக்கக் கூடியவிதமான போக்குடன் எழுதப்பட்டிருப்பது ஸ்ரீமதி அம்மாளது ஆழ்ந்த அனுபவத்தையும், அரிய ஞானத்தையும் விளக்குகின்றன. காதலனாகிய கோபாலனும் கதாநாயகியாகிய ரத்தினம்பாளும் படும் பாடுகளும், பின்னர் நற்பயனடைவதும் வெகு நேர்த்தியாக வரையப்பட்டுள.

—இந்துநேசன். 8—6—29

---

## "மாதவமணி" அல்லது மாசிலாக் காதல்

தமிழ் நாடெங்கும் கீர்த்திபெற்று வரும் 'ஜகன்மோகினி' ஆசிரியரான ஸ்ரீமதி அம்மாளின் சிறிய கட்டுரைகளுள் முதலானது இதுவேயாகும். ஒய்வற்றோரும் ஒய்வேற்படுத்திக்கொண்டு அதி இன்பத்துடனே படிக்கும் வண்ணம் சுருக்கமாக எழுதியிருப்பது சாலவும். போற்றத்தக்கது. 'பணமல்ல பெரிது, குணமும் காதலுமே போற்றத்தக்கன' என்பது இதில் இனியதோர் நடையில் தத்ரூபமாகக் காட்டப்பட்டிருப்பது ஸ்ரீமதி அம்மாளின் சாமர்த்தியத்தை நன்கு விளக்கும். நம்மனோர் இந் நூல்களை ஆதரிப்பாராக.

—இந்துநேசன். 8—6—29

---

கதை சிறியதாயினும் மிகவும் ரஸமாக விருக்கிறது. மாதவனும் ஸ்ரீமணியும் ஒருவரை யொருவர் உண்மையாக நேசித்து இடையில் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தபோதிலும் உறுதியுடனிருந்து கடைசியில் சந்தோஷத்தை யடைந்து செல்வம் ஓரிடத்து நில்லாதென்பதையும் ருஜுப்பிக்கின்றனர்.

—சுதேசமித்திரன் 15—6—29

---

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI OFFICE"
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

182851

அருமை அம்மா! என்னுடைய அழு குரல் உனது செவிக் கெட்ட வில்லையோ! என்மீது உனக்கு இதுகாறு மிருந்த பிரியமெல்லாம் வ்ரயமாகிவிட்டதா! நான் வருந்திடக் கண்டு சகிக்கமாட்டாத நீயே தற்போது இருந்த இடத்தை விட்டுத் திரும்பவில்லையே! என்னுடைய கண்ணீரைக் கண்டு மனம் புண்ணாகத் துடிப்பாயே! என் தாயே! அத்தகைய உனது எண்ணம் சிதறிய வண்ணமாக நீ படுத்து விட்டாயே! ஆ! என்னம்மா! நான் என்னடி செய்வேன்? இனிமேல் யான் இப் புவியில் எதற்காக இருக்கவேண்டுமடி! அம்மா! என் புஷ்பாவையு மிழந்தேன்; உன்னையு மிழக்கப் போகிறேன். இனி மேல் என் உயிரை யான் எதற்காக சுமக்கவேண்டும்? ஆகா! என் தாயே! என் ஆவி துடிக்கின்றதே யன்றி, வெடித்து வெளியில் செல்லவில்லையே! என்ன செய்வேன்?" என்று கதறுகிறாள்; முட்டிக்கொள்கிறாள்.

அப்போது அருகிலிருந்த சிலர் அவளைத் தேற்றினார்கள். கல்யாணியின் துயரத்தைத் தேற்றுவதால் அது ஆறக்கூடியதா? தன் தாயின் முகத்தையே உற்றுநோக்கியபடி யிருந்தாள். இதற்குள் தன் அண்ணனுக்கு இச்செய்தியைத் தெரிவிக்கவேண்டு மென்ற எண்ணம் உண்டாயது. அவள் தந்தி யடிப்பதற்கோ கையில் காலணா கிடையாது; தன் தாயின் நிலைமையை அண்ணனுக்குச் சொல்லாவிட்டாலோ அது பெருத்த விபரீதமாகிவிடும். ஆகையால் அந்த விஷயத்தை எவ்விதமாயினும் தெரிவிக்க வேண்டுவது கடமையாகிவிட்டது. எனினும் தான் எந்தவிதமாகத் தெரிவிக்கலாம்?' என்று யோசித்து வருந்தினாள். அவளுடைய விசன கரமான நிலைமையில் தான் கம்மல் விற்றுக்கொண்டு வந்திருந்த பணத்தில் சிறிது மிச்சமிருப்பது அவளுடைய நினைவிற்கு அப்போது வந்தது. அவ்வாறு நினைவு உண்டாகியதும் சடக்கென எழுந்து அந்த பணத்தில் ஒரு ரூபாயை எடுத்து அங்கு நின்றிருந்தவர்களில் ஒருவர் கையில் கொடுத்து தனது தமயனாரின் விலாசத்தையும் தெரிவித்து தயவு செய்து தந்தி யடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

பணத்தை வாங்கிக்கொண்ட பேர்வழியோ குடிப்பதில் முதல் பரிசு பெறக்கூடியவன். அவன் இயற்கையில் நல்ல குணமுடைய

வனாக விருப்பினும் பாழும் குடியின் பழக்கத்தினால் துர்க்குணியாக மாறிவிட்டான். அவனுக்கு அன்று குடிப்பதற்கு கையில் பொருளில்லாத கொடுமையை எண்ணி அவன் வருந்தியது கொஞ்ச நஞ்சமன்று. கல்யாணியின் துயரத்தைவிட அவன் அதிகமே பட்டுவிட்டான். வயிற்றில் பிறந்த குழந்தையையும் பறிகொடுத்துவிட்டு, பெற்ற தாயாரையும் இழக்குந் தறுவாயில் கடவுளை வேண்டிக் கதறும் கல்யாணியின்பால் அக் கடவுளின் அருள் பிறக்கக் காணவில்லை. அந்தக் குடிகாரன் தனக்குக் குடியில்லாத வேதனையினால் வருந்திய தருணமே கடவுள் ஒத்தை ரூபாயை வாங்கி அவனுக் களித்தது அவனுடைய அதிருஷ்டமல்லவா! அத்தகையவன் தன் கையில் ஒரு ரூபாய் கிடைத்ததும் அவன் அடைந்த சந்தோஷத்தைக் கூறவேண்டுமோ? அவன் பொங்கிப் பூரித்தான். ரூபாயை எடுத்துக்கொண்டு நேரே கள்ளு கடைக்குச் சென்று இஷ்டமானவரையில் குடித்து மனத்தை திருப்தி செய்துகொண்டு வெகு சந்தோஷத்துடன் அந்த சத்திரத்தின் பக்கமும் திரும்பிப் பார்க்காது ஓட்டமெடுத்தான்.

தந்தி யடிக்கச் சென்ற மனிதன் இன்னும் வரவில்லையே என்று கல்யாணி எதிர்பார்த்தபடியே புலம்பிக்கொண்டிருக்கிறாள். அன்று முற்றும் கழிந்துவிட்டது. தந்தி யடிக்கச் சென்றவனையும் காணவில்லை. தந்தி யடித்திருந்தால் தன் அண்ணன் வந்திருக்கலாம்; அவரையும் காணவில்லை. அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை; மனக் குழப்ப மதிகரித்துவிட்டது. ஒருக்கால் அந்த தந்தி அடிக்கப் படாமலேயே இருக்குமா! அன்றி தந்தியைக் கண்டு தான் நம் அண்ணனும் அண்ணியும் வெறுப்பும், கோபமும் கொண்டு வராதிருக்கின்றார்களா, ஒன்றும் தெரியவில்லையே! ஆகா! இவ்விதம் நேருவதெல்லாமும் ஒரு சோதனையா!'' என்று எண்ணி துயர சாகரத்தில் மிதக்கின்றாள். “பின்னும் ஓர் தந்தி யடிப்போமா!'' என்று எண்ணுகிறாள். அதை யாரிடம் கொடுக்கலாம் என்று யோசிக்கின்றாள். அவளுடைய மூளை சுழலுகின்றது. அப்போது வரையில் தன் அண்ணன் வராமையால் மீண்டுமோர் தந்தி யடிப்பதென்றே தீர்மானித்துவிட்டு மற்றுமொரு ரூபாயை

எடுத்து அந்த சத்திரத்தில் சமயல் செய்யும் மனிதனிடம் கொடுத்து முன்போலவே வேண்டிக்கொண்டாள்.

அந்த சமயல்காரனின் உதவியினால் அவ்வூரிலுள்ள அநேக தேய தாசிப் பெண்கள் பலர் உயிர் வாழுகின்றார்கள். சத்திரத்தில் சமயலாகும் சகலமும் அவர்கள் உண்ட மிச்சமானவைகள் தான். சமயல்காரன் பகல் வேளையில் சமயல் வேலை முடிந்த பிறகு தாசி வீட்டில் தான் பேட்டி காணலாம். மற்றைய காலங்களில் கேட்பது வேண்டாம். அவன் சத்திரத்தில் சமயல் செய்த பொருளாகப் பாதியும், சமயல் செய்யாத சாமான்களாகப் பாதியும் தன்னுடைய சம்பளத்தின் தொகை பூராவும் இன்னும் தனக்குக் கையில் கிடைக்கும் சகலத்தையும் அத்தாசிகளுக்கு நேசமாய்ச் சமர்ப்பித்துவிட்டுத் தனது சொந்தமான செலவுக்குக் காலணு வேண்டுமாயின் அந்தம்மாளின் கையை எதிர்பார்ப்பது வழக்கம். அத்தகைய மனிதனின் கையில் அப்போது ஒத்தை பைசாவும் கிடையாது. தனது ஆசை தாசியின் பிறந்தநாள் வைபவம் அன்று மறுநாள் நடக்கின்றது; அதற்காக அந்தம்மாளுக்கு ஓர் பட்டுரவிக்கையேனும் வாங்கிக்கொடுக்க முடியாமலிருந்ததற்கு வருத்தப்பட்டுக் கொண்டே இருந்தான். அத்தருணம் கல்யாணி தந்தி யடிக்கும் படியாக ஒரு ரூபாய் கொடுத்ததும் அதை வாங்கிக்கொண்ட சமயல்காரனுக்கு மனம் மலர்ந்தது. எனினும் ஒரு ரூபாய் ரவிக்கைக்குப் போதாதாகையால் இன்னும் மிச்சம் தேவையாகிய ரூபாயை அந்த சமயம் அந்தம்மாளின் மூலமே கறக்க எண்ணியவனாய் அவளை நோக்கி, "அம்மா! இந்த ஊரின் வழக்கம் தமக்குத் தெரியாதுபோலிருக்கின்றது. ஒரு தந்தி யடிக்கவேண்டுமாயின் 5 ரூபாய் சிலவழித்தால்தான் தந்தி யடிக்கக் கூடும்; இல்லையேல் முடியாது. இது தனியான புது ஏற்பாடு" என்றான்.

வஞ்சகனின் நஞ்சு போன்ற மொழியை உண்மை என்று நம்பிய கல்யாணி 5 ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தாள். சமயல்காரன் அதை வாங்கிக்கொண்டு தபாலாபீஸுக்குச் சென்று 12 அணு சிலவிட்டு தந்தியொன்று அடித்துவிட்டு நேரே ஜவுளிக் கடைக்குச் சென்று தன் ஆசை நேசிக்கு 4 ரூபாயில் ஓர் பட்டு

ரவிக்கையும், மிச்ச முள்ள நாலணுவுக்கு வெத்திலே பழம் முதலியன வும் வாங்கிக்கொண்டு தாசி வீட்டிற்குச் சென்று மறுநாள் கொண்டாட்டத்திற்காக முதல் நாளே கொடுத்து மனமகிழ்ந்துப் பின் வீடுவந்து தந்தி யடித்த செய்தியைக் கல்யாணிக்குத் தெரிவித்தான்.

அச் செய்தியைக் கேட்ட கல்யாணிக்கு முன்னிலும் பதின் மடங்கு அதிகரித்த துயரமும், திகிலும் தோன்றி வதைக்கத் தொடங்கியன. "நமது அண்ணன், அண்ணி வந்தால் என்னே என்ன சொல்வார்களோ? ஐயோ! ஒவ்வொரு விநாடிப் பொழுதும் ஏற ஏற என் மனத்தில் திகிலும் சங்கடமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றனவே! அம்மா! உன் மகன் வரும் நேரத்திற்குள் நீ கண் திறந்து பார்க்கமாட்டாயா!" என்று கலங்கிக்கொண்டே இருக்கையில் சிங்காரம்மாள் திடீரென்று கண்ணேத் திறந்து பார்த்தாள். வெகு துடுக்காகப் பேசத்தொடங்கி" அடி! கல்யாணி! "ஊரும் சத மல்ல" "தந்தை தாய்தமர்" என்ற பாடல்களேக் கவன த்தில் எண்ணு. வேதகிரீசன் திருபுரசுந்தரி இருவர் பாதத்தை மறவாதே! தஞ்சமாகி சரண மடைந்து உன் காலத்தைக் கடத்து. நீ அவர்களிருக்கையில் பரதேசியாகமாட்டாய்.ஜாக்ரதை;உலகத்தை நம்பாதே! கடவுளேயே நம்பு! உன்னேயே நீ வெறுத்துவிடு. என் மீது வைத்த ஆசையை இந்த நிமிடத்திலிருந்து ஒழித்துவிடு. ஆ! என்னப்பனே! கருணமூர்த்தி! என்னே க்ஷமித்து ஆட்கொண்டருளு வாய்!" என்று கூறிக் கரங்குவித்தவாறு இக் கர்மபூமி வாஸத்தை விட்டுப் பரந்தாமனின் அடிகளில் சேர்ந்துவிட்டாள்.

அந்தோ! தாயின் உயிரும் மாயமாய் மறைந்துவிட்டது கண்ட கல்யாணி "ஆ! என்னுருயிர்த்தாயே! என் அன்பான தாயே! என் ஆசைத்தாயே! போய்விட்டாயே! போய்விட்டாயே! ஐயையோ! இனி யான் என்னடி செய்வேன்? அம்மா!

நீலாம்புரி ராகம்

பெண்ணுக ஜெனிப்பித்த பெரும்பாவி எனேவிட்டு
விண்ணகம்புகுந்தாயோ! கண்மணித்தாயே!

மண்ணில் உதித்து நீ யுன்மக்களின்ப மறியா
புண்ணுனமனத்துடன் போந்தாயோ தாயே!
நின்னைசதமேனவே நினைத்திருந்தவேந்தன்
முன்னம் உருகவைத்து அன்னுயே சென்ருயோ!

என்று பதறிக்கதறித் துடித்து முட்டிக்கொள்கிருள். அங்குள்ளோர் சிங்காரம்மாளின் சவத்தை வீதித்திண்ணையில் கொண்டுபோய் போட்டுவிட்டுக் கல்யாணிக்குப் பலவிதமாகத் தேறுதல் கூறி கல்யாணியின் அண்ணன் வரும் வழியை எதிர் பார்த்திருந்தார்கள். அன்று பூராவும் சவத்தை வைத்துக்கொண்டு காத்திருந்தும் அம்பலவாணன் வரவில்லை. அவன் வராமையால் கல்யாணியின் துக்கமும் பயமும் அதிகரித்துவிட்டன. "ஐயோ! தந்தியடித்திருந்தும் இன்னும் அண்ணன் ஏன் வரவில்லையோ தெரியவில்லையே! என் தீவினையே தந்தியையும் மறைத்திருக்குமோ! ஆகா! என் தாயே! உன் மகனையும் காணவில்லையே! நான் என்ன செய்வேனடி? ஐயோ! அம்மா! அம்மா!" என்று கதறுகின்ருள். அந்த ஊரில் கோயில் இருப்பதால் சவத்தை சீக்கிரம் அடக்கம் செய்ய வேண்டும் என்று எல்லோரும் கல்யாணியிடம் தெரிவித்தார்கள்.

அந்தோ! அவ்வமயம் கல்யாணி என்ன செய்வாள் பாவம்! தன் வயிற்றில் பிறந்த சிசுவும் தன்னை வஞ்சித்ததுபோல எங்கோ மறைந்துவிட்டது. தன் தாயும் தன்னை நிராதரவாக விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். தன் அண்ணனே இன்னும் வரக்காணவில்லை! ஊாரோ சவத்தைத் தூக்கும்படியாகக் கூறுகின்ருர்கள். அவள் மெய்ம்மறந்து கதறுவதைத் தவிர வேறொன்றும் தெரியாதவளாய்த் தபிக்கின்ருள்.

அத்தருணம் அம்பலவாணனும், அவன் மனைவியும், இன்னும் சில உறவினர்களும் அங்குவந்து சேர்ந்தார்கள். ஆகா! அம்பலவாணன் தன் தாயாரின் சவத்தையும், பரதேசிபோலத் துடிதுடிக்கும் கல்யாணியையும் கண்டு தாங்கமாட்டாத விசனத்தையடைந்து கோவெனக் கதறிவிட்டான். "ஆ! என் தாயே! என்னைப் பெற்ற தாயே! என்னுருபிர்த்தாயே! எனது துர்க்குணத்தின் பய

னல் உனது அந்திய காலத்தில் அருகிலிருந்து உபசரிக்காத பாவி யானேனே! எனக்கு வாய்த்துள்ள பிரம்மராக்ஷஸியினல் நான் பல விதத்திலும் பாழாகிவிட்டேனே! இனி ஆயிரங்காலம் தபம் செய்தாலும் உன்னை உயிருடன் காண்பேனு! உனது வயிறும், என் கல்யாணியின் வயிறும் எரிந்து இட்டுள்ள சாபம் என்னை விடுக்குமா! அனியாயமாக, தெரிந்தும் பரமபாதகமான பாபத்தைச் செய்து வீணுகிவிட்டேனே! ஐயோ! கல்யாணி! என்வீட்டைவிட்டு நீ வந்த தருணம் கூறிய மொழிகளானவை இப்போதும் என் காதில் ஒலிக்கின்றனவே! உன் கதி அதோகதியாகிவிட்டதே!'' என்று ஏதேதோ கூறிப்புலம்பித் துடிக்கின்றான். தாய்மீது விழுந்து புரளுகின்றான்.

இந்த அபாரமான துக்கத்தைக் கண்ணுறும் ஜனங்களெல்லாம் கண்ணில் நீர் சோரவிட்டவண்ணமிருக்கின்றார்கள். கல்யாணி நிலை புரண்ட துக்கத்துடன் அண்ணனின் காலில்விழுந்து கதறினுள். இருவரும் தமது வாயில்வந்தவாறெல்லாம் புலம்பித் தீர்த்துவிட்டார்கள். அம்பலவாணனின் பெண்ஜாதி அருகிலும் வந்தவளில்லை. இதற்குள் பொழுது ஏறிவிட்டதால் அங்குள்ளவர்களின் உதவியால் சவத்தை முறைப்படி அடக்கம் செய்துவிட்டார்கள்.

பிறகு எல்லோரும் ஸ்நானம் செய்துவிட்டு சத்திரத்திற்கே வந்தார்கள். கல்யாணி தன் அருமைக் குழந்தையைக் காணுத விஷயத்தை அண்ணனுடன் அப்போதே தெரிவித்தாள். அதைக் கேட்டு அம்பலவாணன் அளவிலா விசனத்தை யடைந்தான். அவன் சம்சாரம் கல்யாணியுடன் எதுவுமே பேசவில்லை. அவளுடன் கல்யாணி தானுக வலுவில் சென்று பேசினுலும் பதில் கூருமையால் பேசாது போய்விட்டாள். அம்பலவாணன் கல்யாணியை எங்கே வீட்டிற்கு அழைத்துக்கொண்டுவந்துவிடப்போகிறுனே என்கிற திகில் அவன் பெண்சாதிக்குப் பிடித்துவிட்டது. அந்த எண்ணத்தை ஜாடையாகத் தெரிவித்தும்விட்டாள். அம்பலவாணன் கல்யாணியை ஊருக்கு அழைத்தான். நமது கல்யாணி அண்ணனின் அடிபணிந்து, ''அண்ணு! இனி இவ்வேதகிரீசனின் சன்னிதியைத் தவிர வேறு இடம் எனக்குக் கிடையாது. அவனுடைய சன்னி

தானத்தின் எல்லையிலேயே எனது சவமும் தொலைந்துபோகட்டும். இனிமேல் என்னைத் தாங்கள் மனதிலும் நினைக்கவேண்டாம். வார்த்தையை வளர்த்த எனக்கு இஷ்டமில்லை. சுருங்கக்கூறிவிட்டேன். மன்னிக்கவும்.'' என்று மறுத்துவிட்டாள். அம்பலவாணன் எத்தனை தரம் அழைத்தும் மறுத்துவிட்டபடியால் அவ்விசனத்துடன் அவன் வந்தவர்களோடு ஊர் போய்ச் சேர்ந்தான்.

முற்றும் நனைந்தவர்க்கு ஈரமுண்டோ! என்பது போல சகல விதத்திலும் துயரக்கடலில் மூழ்கிவிட்ட கல்யாணிக்கு வருத்தமும் வேண்டுமா! அவள் உன்மத்தங் கொண்டவள்போலாய்விட்டாள். மனங் கல்லாய்ச் சமைந்துவிட்டது. எந்த விடத்தை உற்றுநோக்கினும், "ஆ! கண்மணி! புஷ்பா! அம்மா!'' என்று பிதற்றுவதைத் தவிர வேறு யாவற்றையும் மறந்தாள்.

அச்சத்திரத்திலுள்ள ஓர் கிழவியே கல்யாணிக்கு பலவிதத்திலும் ஆறுதல் மொழிகளைக் கூறித் தேற்றுவதோடு "அம்மா! துயரத்தையடைந்து தவிக்கும் ஜனங்களின் எண்ணோ உலகில் நிறைந்திருக்கின்றது. அதற்கு முக்கியமாக என்னுடைய சரித்திரத்தையே ஓர்கதையாகச் சொல்கிறேன் கேள். இன்னும் எனக்குத் தெரிந்து கண்ணெதிராகக் கண்ட அனுபவங்களையும் கூறுகின்றேன் கேள். நீ சதா இவ்விதம் இருப்பதில் பயித்தியம் பிடித்துவிடும். ஆகையால் யான் சொல்வதைக்கேளு. அம்மா! கல்யாணி! என்னுடைய பெற்றோருக்கு நான் ஒரேயொரு பெண்தான். அவர்கள் என்னை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். எனது பெற்றோர்களால் எனக்குண்டான போகபாக்கியத்திற்கு அளவே இல்லை. நான் இச்சித்த எந்த பொருளும் என்னெதிரில்உத்தாக்ஷணத்தில் வந்து நிற்கும். என்னை என் அத்தையின் மகனுக்கு விவாகம் செய்துவைத்தார்கள். பிறகு எனது பெற்றோர் தமது சொத்து பூராவும் எனக்கே கொடுத்துவிட்டுக் காலகதியானார்கள். என் பெற்றோர் கொடுத்த சொத்துக்களை என் பர்த்தா வீட்டில் வைத்திருந்தால் கள்ளன் அபகரித்துவிடுவான் என்கிற பயத்தினால் வட்டிக்கும் கொடுத்து ஏமாராமல் கள்ளுக்கடை பாங்கியில் பாதியும், தேவடியாள் பாங்கியில் பாதியுமாக வைத்துவிட்டார்.

அத்தகைய மனிதரிடம் யான் எவ்விதமாகத்தான் இல்லறம் நடத்தியிருப்பேன் என்பதை நீயே அறிந்துகொள். நான் அடைந்த துன்பங்கள் அளவிடற்பாலதுஅ. அந்த வளவில் குழந்தைகளும் இரண்டு பிறந்துவிட்டன. என் பங்கில் ஸ்வாமி இருந்து இரண்டையும் ஆணுகப் பிறப்பித்தார். என் கணவருக்குக் கடுமையான நோய்கண்டு படுத்திருந்த தருணம் எனது சிறிய மகன்—10 வயதும் நிரம்பப்பெறுதவன்—திடீரென்று காணுது போய்விட்டான். ஆகா! அவனிடத்தில்தான் எனக்கு உயிரெல்லாம். அவனைக்காணுதுபோன அன்று முதல் இன்றுவரையிலும் தேடித்தேடிப் பார்த்துவிட்டோம். எங்கும் என் அருமை மகனைக் காணவில்லை. அவனிடத்திலிருந்த அஞ்ஞானத்தினுல் கண்ட ஜோஸியனிடத்திலெல்லாம் ஜோஸியம் கேட்டு அதன் நிமித்தமாய்க் கையிலிருந்த பொருளை எல்லாம் தாரைவார்த்துவிட்டேன். நான் இவ்விதம் பித்து பிடித்து பணத்தைச் செலவு செய்துவிடுகிறேன் என்ற ஆத்திரங்கொண்டு என் பெரிய மகனும் மருமகளும் என்னை கண்டபடி திட்டி வீட்டிலிருந்து வெறட்டிவிட்டார்கள். பிறகு யான் கண்ணீர் பெருக மனம் வெறுத்துப் போய் வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன். என் விதியை எண்ணி நொந்தவாறு ஒவ்வொரு க்ஷேத்திரமாக ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டு கடைசியாக இந்த க்ஷேத்திரத்தில் என் காலத்தைக் கடத்துவதென்று தீர்மானித்து இங்கு நின்றுவிட்டேன். இந்த சத்திரத்து வேலையைச் செய்துகொண்டு இங்கு கிடைத்ததைப் புசித்துவிட்டு சிவனே என்று கிடக்கின்றேன், யான் பெற்ற பிள்ளைகளில் ஒருவனை உயிருடன் பறிகொடுத்துவிட்டேன். மற்றவன் உலகத்தவரைப் போல அல்லாமல் எனக்குச் சத்துருவாக ஆய்விட்டான். உம் இவ்விதம் அநுபவிப்பதெல்லாம் பூர்வ ஜன்மத்தின் பாபச் செயலே யன்றி வேறில்லை. என்னைப் போல இவ் வுலகத்தில் யாரும் இருக்க மாட்டார்களென்று எண்ணி இருந்தேன். தற்போது நீ யொருத்தி இருக்கிறுய் போலும். மக்களாவது மனிதராவது எல்லாம் மாயை. கடவுளின் பாதாரவிந்தம் ஒன்று தான் சொந்தமானது. மனத்தில் வருத்தமென்னும் அழுக்கை அலம்பி சுத்தம் செய்து பகவானிடத்து பக்தியாகிய தூய்மையை குடி புகுத்தினுல் நாம்

நமது பிறவிப் பிணியை நீத்து மோட்சமடையலாம். வருந்தாதே! கண்ணீர் பெருக்காதே! எழுந்து வா! கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு வரலாம்'' என்று தனது கதைகளைக் கூறி, கல்யாணியைத் தேற்றினள்.

இதைக் கேட்ட கல்யாணியின் மனம் சற்று விரக்திகொள்ளத் தொடங்கியது. எனினும் அவள் தன்னுடைய குழந்தையை மறக்க மாட்டாதவளாய் வயிற்றிற்குள் சங்கடப்பட்டுக்கொண்டே கோவிலுக்குக் கிளம்பினள். கண்ணீர் பெருகியவாறு சுவாமி தரிசனம் செய்துகொண்டு அன்று பூராவும் அக் கோயிலிலேயே இருந்து தனது விசனத்தை ஆற்றிக்கொண்டு பொழுதைப் போக்கினள். அவ்விதம் இருப்பது அவளுடைய மனத்திற்கு மிகுந்த தெம்பையளித்தது. ஆகையால் அவள் தினகாலமும் தன் பொழுதை கோவிலிலேயே கழிக்கத் தீர்மானித்துவிட்டாள். அவ்வூர் அக்ரகாரத்திலுள்ள வீடுகள் தோறும் சென்று லஜ்ஜையை விட்டு அரிசி யாசித்து அதை மாவு செய்து கோயிலுக்குக் கோலமிட ஆரம்பித்தாள். அதோடு கோயிலின் ஒரு பக்கத்தில் வீணுகக் கிடந்த மண் தரையில் பலவிதமான புஷ்பச் செடிகளை வைத்து பயிரிடத் தொடங்கினள். அந்தச் செடிகளும் கடவுளின் கருணையாலும் கல்யாணியின் பக்தியினலும் புஷ்பிக்கத் தொடங்கின. அந்த புஷ்பங்களை மாலை கட்டி சாத்த வாரம்பித்தாள். கோல மிடுவதும், புஷ்பம் கட்டுவதுமாக கைங்கரியம் செய்யும் கல்யாணிக்கு கோவிலிலேயே பில்லை சாதம் கொடுப்பதாக ஏற்பாடு செய்து கொடுத்துக்கொண்டே வருகிறார்கள். கல்யாணி தனக்குக் கிடைத்த சாப்பாட்டைத் தன்னுட னிருக்கும் கிழவிக்கும் கொடுத்து தானும் புசித்துவிட்டு கோல மிடுவதையும் மாலை கட்டுவதையும் தனது முக்கிய வேலையாகக் கொண்டு வெகு பக்தி ச்ரத்தையுடன் செய்து வருகிருள். கல்யாணியின் மன வெறுப்பினல் தலையை ஓர் சடையாகத் திரித்துவிட்டாள். காவி வஸ்திரமே தரிக்க வாரம்பித்துவிட்டாள். அந்தோ! அவளுடைய உருவம் முற்றும் மாறுபாடடைந்து போய் அவள் பண்டாரச்சி போல ஆய் விட்டாள். பகவத் கைங்கரியத்தினல் அவளுடைய துக்கமும்

மறைந்து நீறு பூத்தநெருப்பு போல இருக்கிறது. தனது உயிரை வேதகிரீசனுக்குத் தானம் செய்துவிட்டவள் போல தன் பொழுது முற்றும் கோவிலிலேயே போக்கலானுள். இது இங்ஙன மிருக்க.—

கல்யாணியின் குழந்தை முறுக்கு விற்றவனின் பின்னேடு சென்றுவிட்டதை அம் முறுக்குக்காரன் ஒரு சிறிதும் கவனித்தானில்லை. பொழுது அஸ்தமிக்கும் தருணமாகிவிட்ட படியால் அந்த முறுக்குக்காரன் அந்தி பூஜை தரிசனத்திற்காக கோயிலுக்கு வரும் ஜனங்களுக்கு இடையே சென்ருல் தனது முறுக்கு செலவாகும் எனற எண்ணங் கொண்டு விசையாக கோயிலுக்குச் சென்றுவிட்டான். அவனைப் பின் பற்றியே சென்ற குழந்தையை அந்த இருள் சூழ்ந்த நேரத்தில் கவனிப்பாருமில்லை. "அடேய் முறுக்குக்காரா! முறுக்குக்காரா!" என்று கத்திய வண்ணம் குழந்தை அவன் சென்ற திக்கை நோக்கிச் சென்றும் அவன் சென்ற வழியை அறியக் கூடாமல் குறுக்கில் செல்லும் சிறிய வழியில் நுழைந்துவிட்டது. அவ் வழியோடும் அவ்வாறே கூவிக்கொண்டு சென்று சந்துகளையும் தெருக்களையும் கடந்து கொண்டு வெகு தூரம் சென்றுவிட்டது.

அவ்வழியோடு குழந்தை அழுது செல்வதைச் சிலர் கண்டும் அதுதன் சொந்த மனிதர்களின் கூடவே செல்வதாக எண்ணிவிட்டார்கள். பொழுது செல்லச் செல்ல இருள் அதிகரித்து விட்டதால் குழந்தைக்கு பயமும் நடுக்கலும் உண்டாகிவிட்டது. எங்கு பார்த்தாலும் இருள் நிரம்பிவிட்டதால் இருளை நோக்குங் காலமெல்லாம் வீல், வீல் என்று பெரிய சத்தமிட்டுக் கத்த வாரம்பித்து விட்டது. இது பரியந்தம் "முறுக்குக் காரா!" என்று மட்டும் கத்தியதால் பிறர் கவனிக்க வியலாது போய்விட்டது. தற்போது பெரிதாகக் கத்த வாரம்பித்தவுடன் குழந்தையின் அழுகுரலைக் கேட்ட பிறர் வீதியில் வந்து குழந்தையைக் கவனிக்கத் தொடங்கினர்கள். "நீ யாரம்மா!" என்று கேட்டவாறு ஓடிய குழந்தையை நிற்கச் செய்து எடுத்துக்கொண்டார்கள். குழந்தைக்கோ தான் என்றும் கண்டறியாத புது மனிதர்களைக் கண்டதும் முன்னிலு மதிகரித்த பயம் மேலிட்டதால் அது அலறி அலறி அழ வாரம்

பித்து எல்லோரையும் விறைக்க விறைக்கப் பார்த்தது. இதைக் கண்ட அங்கு கூடிய மனிதர்களில் ஒரு பெரியவர் குழந்தைக்கு ஏதோ தின்பண்டத்தைக் கொடுத்து, அதைத் தான் எடுத்து கொண்டு சமாதானம் செய்து "அம்மா! குழந்தாய்! நீ யாரம்மா! நீ எங்கிருந்து வந்தாய்! உனது அம்மா, அப்பா எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?" என்று வினயமாய்க் கேட்டார். அக் குழந்தைக்கோ அழுவதைத் தவிர பதில் பேசுவதற்கே தெரியவில்லை. அவர்கள் முகத்தைப் பார்ப்பதும் அழுவதுமாகவே இருக்கிறது. எத்தனை பேர்கள் எவ்விதம் சமாதானம் செய்தும் குழந்தையின் அழுகை ஓய்ந்தபாடில்லை.

பிறகு அங்குள்ளவர்களில் சிலர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு "இது யாருடைய குழந்தை! யாருடைய குழந்தை?" என்று வீதி தோறும் கேட்கத் தலைப்பட்டார்கள். குழந்தையை அவ்வூரில் கண்டவர்கள் யாரு மில்லை யாதலால் "எமக்குத் தெரியாது; எமக்குத் தெரியாது" என்று கூறிவிட்டார்கள். அப்போது இராக்காலம் அதிகரித்துவிட்டது; அதோடு குழந்தையும் புலம்பிய வண்ணம் நித்திரையில் ஆழ்ந்துவிட்டது. இனிமேல் எங்கு சென்று அலைவது; நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணியவராய் நித்திரை செய்யும் குழந்தையுடன் அதை எடுத்துச் சென்ற பெரியவர் வீடு திரும்பினார். அக் குழந்தையை தமது பக்கலிலேயே படுக்கவைத்துக்கொண்டார். குழந்தை பசியின் கொடுமையினால் பாதை பட்ட இளைப்பாலும், வெகு தூரம் நடந்தும் அழுதும் வந்த சிரமத்தினாலும் அயர்ந்து துயின்றுவிட்டது. விடியற் காலம் மூன்று மணிக்கு கண் விழித்துக்கொண்டு "அம்மா! அடி அம்மா! எனக்குப் பசிக்கின்றதே! இன்னமும் சாதம் போடமாட்டாயா!" என்று கேட்டது.

இதைக் கேட்ட பெரியவர் தானும் கண் விழித்து எழுந்து உட்கார்ந்துகொண்டு குழந்தையை மடிமீது வைத்து அணைத்தவாறு "அம்மா! குழந்தாய்! உனக்குப் பசி எடுக்கின்றதா! சாதம் போடட்டுமா?" என்று வெகு பக்ஷத்துடன் கேட்டார். குழந்தையும் சாதம் வேண்டுமென்று சொல்லியதும் தானே உட் சென்று இரவு

தண்ணீரில் சேர்த்த பழய அமுதை ஓர் கலத்திலிட்டு ஆடைத் தயிரை வார்த்துக் கலந்து ஊறுகாய் வகையுடன் கொணர்ந்து குழந்தையின் முன்னால் வைத்தார். அந்தோ! அக் குழந்தை அதன் ஜன்மத்தில் அவ்வித ஆடைத் தயிரைக் கண்டறிய மாட்டாதாகையால் அந்த அன்னத்தை வெகு ப்ரீதியுடன் சுரு சுருப்பாக ஓர் விநாடியில் புசித்துவிட்டு மீண்டும் சாதம் வேண்டுமெனக் கேட்டது. உடனே பெரியவர் முன்போலவே ஆடைத் தயிர் விட்ட அன்னத்தை வைத்து வெகு வாஞ்சையுடன் அதை புசிக்கச் செய்தவாறு "அம்மா! உன் பெயரென்ன?" என்று கேட்டார்.

குழந்தை தயிர் சாதம் சாப்பிடும் ஆநந்தத்தினால் தனது பழய நினைவை எல்லாம் அறவே மறந்து குதூகல மடைந்தவாறு பேசத் தொடங்கி "என் பேரு புஷ்பா" என்று வாய் நிறைய சாதத்தை அடக்கிக்கொண்டு கூறியது. அவ்வாறு கூறிய வார்த்தை கிழவர் செவிக்கு பா பா என்று கேட்டது. குழந்தையை செல்லமாக "பாப்பா!" என்று அழைக்கும் வழக்கமோ என்னவோ என்று எண்ணி தானும் "பாப்பா!" என்றே அழைக்கத் தொடங்கி "பாப்பா! உனக்குப் பசி அடங்கிற்று! இன்னும் சாதம் வேண்டுமா?" என்று கேட்டார்.

இதுகேட்ட குழந்தை "தாத்தா! சாதம் வேண்டாம்: தயிரு தான் வேண்டும்" என்று கேட்டது. உடனே கிழவர் ஆடையுடன் தயிரை வார்த்து வெண்ணையும் ஒரு உருண்டை கொடுத்தார். குழந்தை வெகு திருப்தி யுடன் புசித்துக்கொண்டே "தாத்தா! எங்கம்மா எங்கே!" என்றது.

கிழவர்:—அம்மா! உங்கம்மாள் எங்கே என்பது உனக்குத் தெரியாதா? எங்கே போயிருக்கிறாள்? உங்கள் அம்மா பேர் என்ன?

குழந்தை:—தாத்தா! எங்கம்மா:பேரு அம்மா தான். அம்மா எங்கே போனாளோ எனக்குத் தெரியாது. எங்க பாட்டி எங்கே?

கிழவர்:—உங்க பாட்டி யாரம்மா! அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள்? சொல்லு நான் உன்னை அங்கு கொண்டுவிடுகிறேன்.

குழந்தை:—தாத்தா! அவாளெல்லா எங்க ஆத்தலே இருக்கா! கொண்டுவிட்டுடு தாத்தா! எங்கம்மா என்னே அடிப்பா.

கிழவர்:—உங்கள் வீடு எங்கிருக்கிறது சொல்லம்மா! நான் உன்னை அழைத்துக்கொண்டு போகிறேன்.

குழந்தை:— எங்க வீடு ரோட்டுலே இருக்குது. அழைத்துக் கொண்டுபோ.

கிழவர்:—எந்த ரோட்டில் இருக்கின்றது?

குழந்தை.—வேறே ஊரு ரோட்டிலே இருக்குது. வண்டிலே போனு ரோட்டு வரும். எங்க மாமா ஊருக்கு அப்பறம் வேறெ ஊரு இருக்குதே அந்த ஊரு ரோட்டுலே பெரிய வீட்டிலே இருக்கா—என்று தகவல் தெரியாமல் கூறிற்று. இதைக் கேட்ட கிழவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்த ஊரிலேயே வீடு என்று எண்ணுவதா, அன்றி அயலூரில் என்று நினைப்பதா! மாமா ஊருக்கு அப்புறம் இருக்கிறதென்று கூறுகின்றதே! மாமா ஊரு எது? எந்த ஊரில் இதன் மாமா இருக்கிருன்?'' என்ற ; பல யோசனைகள் ஜனித்துவிட்டதால் அவரால் ஒன்றும் நிச்சயிக்கக் கூடவில்லை. பின்னும் குழந்தையைத் திருப்பித்திருப்பி எத்தனை தரம் கேட்டதற்கும் அது குழந்தை வார்த்தையாகவே சொல்லிற்று. பிறகு பெரியவர் குழந்தைக்கு சமாதான மொழிகளைக் கூறி அதை மீண்டும் நித்திரை செய்யச் செய்தார்.

பொழுது புலர்ந்து வெகு நேரங் கழித்து குழந்தை எழுந்தது. கிழவர் அதை எடுத்துக்கொண்டு "இது உன் வீடா! இவள் உங்கள் தாயாரா!'' என்று சில வீடுகளையும் மனிதர்களையும் காட்டி கேட்டுக்கொண்டே வந்தார். குழந்தை "இல்லை! இல்லை'' என்றே விடை யளித்தது. அன்று மாலை வரையில் தேடியும் எங்கும் தகவல் கிடைக்காமையால் வீடு திரும்பிவிட்டார். அன்றைய தினமே கிழவரை அவசரமாக வெளியூருக்கு வரும்படி அவரது பந்துக்களிடத்திலிருந்து தந்தி வந்துவிட்டதால் அவர் கலவரமடைந்து அனுதையான குழந்தையை விட்டுச் செல்ல மன

மில்லாது எடுத்துக்கொண்டு வெளியூருக்குப் போய்விட்டார். குழந்தை சற்று பிடிவாதமாக "அம்மா! அம்மா!" என்று கத்தியது. கிழவர் அதை சமாதானம் செய்து தின்பண்டங்களைக் கொடுத்து அதன் கவனத்தை மாற்றியவாறு ப்ரயாணத்தைச் செய்து முடித்து ஊரை யடைந்தார். கிழவருடைய உடன் பிறந்தவள் இறக்குந் தறுவாயை அறிவிக்கவே தந்தி வந்தது. அவர் ஊரை யடைந்ததும் அவருடைய உடன் பிறந்தாள் தனது இரு பெண் குழந்தைகளையும் கிழவரிடம் ஒப்புவித்துப் பாதுகாக்கும்படியாகக் கூறிவிட்டு விண்ணுலகை மடைந்தாள். கிழவருடைய விசனத்திற்கு எல்லையே இல்லை. தனது உடன்பிறந்தவளுக்கோ புசிப்பதற்கு ஐவேஜு கிடையாது. அவள் தனது சரீர பாடு பட்டு குழந்தைகளை வளர்த்து வந்ததும் :ஒழிந்து போய் அவற்றை கிழவரின் பாது காப்பிலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டமையால் அக் குழந்தை களின் போஷணையும் கிழவர் தலைமீதே சுமத்தப்பட்டது. அப் பெண்களில் மூத்தவளுக்கு 8 வயதும் இளையவளுக்கு 6 வயதும் நடக்கின்றது. நமது புஷ்பவல்லிக்கும் 4 வயதாகிறபடியால் மூன்று பெண்களும் வயதின் க்ரமத்தில் முறையே ஓர் தாய் வயிற்றின் குழந்தைகளென்று எல்லோரும் எண்ணும்படியாக விருந்தார்கள். கூடவிருக்கும் இரு குழந்தைகளின் விளையாட்டில் கலந்துகொண்ட புஷ்பா நாளாவட்டத்தில் தனது அழுகையை நிறுத்திவிட்டாள். தன் தாயார் பிறகு வருவாள் என்று தாத்தா சொல்லிய வார்த்தையை நம்பி பேசாதிருந்து குழந்தைகளோடு குழந்தையாய் விளையாட்டில் தனது கவனத்தைச் செலுத்தி விட்டாள்.

கிழவர் தனது உடன் பிறந்தவளின் கிரியைகளை முடித்து விட்டார். கிழவருக்கும் வேறு சம்சார மில்லாமையால் இந்த மூன்று குழந்தைகளையும் எவ்விதம் தான் காப்பாற்றுவது என்று சிந்திக்கலானார். அவருக்கோர் யோசனை தோன்றியது அதாவது, "அனாதைக் குழந்தைகளை ஆதரிப்பதற் கெனவே ஓர் ஆச்ரமம் (பாடசாலை) அடுத்த அமராபுரியில் ஓர் புண்ணியவானால் நியமிக்கப் பட்டிருக்கின்றது. அதில் நமது குழந்தைகள் மூவரையும்

கொண்டு சேர்த்துவிடுவது" என்று தீர்மானித்து அதற்கான ஏற்பாடு செய்து குழந்தைகளை அழைத்துக்கொண்டு பாடசாலையை அடைந்தார். அங்குள்ள தலைவரைக் கண்டு இக் குழந்தைகள் மூன்றும் தனது உடன் பிறந்தவளின் குழந்தைகள் என்றும், திக்கற்ற அனாதைகளென்றும் குழந்தைகளை ஆதரிக்கவேண்டுமென்றும் தம்மாலியன்ற பொருள் உதவுகின்றதாயும் தெரிவித்தார். ஆசிரம அதிகாரியும் அதற்கு இசைந்து குழந்தைகளை வைத்துக்கொள்ளுவதாக வாக்களித்தார். குழந்தைகளுக்கு தம்மாலானவரையில் சமாதானம் செய்து அந்த ஆசிரமத்திலிருக்கும்படியாகத் தேற்றினார். புஷ்பா மட்டும் தாதாவை விட்டுப் பிரியவே மாட்டாது புலம்பினாள். கிழவர் அவளுக்கான பல தேறுதல்களைக் கூறியதுடன் "அம்மா! நீ இங்கிரு; நான் சென்று உன் தாயாரைத் தேடிக்கொண்டு வருகிறேன்" என்ற கதையைக் கூறினார். அதற்கு அவள் ஒருவாறு சம்மதித்தாள். கிழவரின் உடன் பிறந்தவளின் பெண்களில் மூத்தவளுக்கு பங்கஜா வென்றும் இளையவளுக்கு அம்புஜா வென்றும் முறையே பெயர்களுண்டு. கிழவர் புஷ்பாவின் பெயரை யறியாதவராகையால் அவளுக்கு வனஜா என்கிற பெயரைச் சூட்டி அவர்களின் பெயரை ஆசிரமத்தாரிடம் பதிவு செய்துவிட்டு குழந்தைகளிடம் சொல்லிக்கொண்டு பிரிய மனமில்லாது விசனித்துக்கொண்டே சென்றார். ப்ரதி தினமும் மாலை வேளையில் ஆசிரமத்திற்கு வந்து குழந்தைகளைப் பார்த்துவிட்டுச் செல்லும் வழக்கத்தைக் கைக்கொண்டார்.

தமது புஷ்பா ஆசிரமத்திற்கு வந்து சில தினம் வரையில் தனது தாயாரின் நினைவாகவே இருந்து அடிக்கடி அதைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தாள். அங்குள்ள மற்ற சிறுமிகளின் விளையாட்டினாலும், உல்லாசமான பொழுது போக்கினாலும், ஆரோக்கியமான நல்ல சாப்பாட்டினாலும் அவள் தனது பழைய நினைவை மறக்கத் தொடங்கி பிறகு மறந்துவிட்டாள். ஆச்ரமத்தில் இவர்களுக்கு ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்கத் தொடங்கினார்கள். மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு இம் மூவரும் கல்வியில் தமது கவனத்தைச் செலுத்தி நன்றாகப் படிக்க வாரம்பித்தார்கள் (நமது புஷ்பாவை இனி வனஜா வென்றே அழைப்போம்)

18285

வனஜா தனது பழய காலத்து நினைவு முற்றும் மறந்து தனது கல்வியிலும் ஸங்கீதத்திலும் சத் சகவாஸத்திலும் தன்னுடைய அருமையான பொழுதை முற்றிலும் கழிக்கலானாள். நம்முடைய தாய்ப் பாஷையாகிய தமிழும், நமது ராஜ பாஷையாகிய ஆங்கிலமும், தேவ பாஷையாகிய ஸம்ஸ்க்ருதமும் ஆக மூன்று பாஷைகளை அவ்வாச்ரமத்தில் முறையே கற்றுக்கொடுத்தார்கள்.

அம் மூன்று பாஷைகளிலும் நமது பெண்கள் மூவரும் தமது சாமார்த்தியம் பூராவும் உபயோகித்து வெகு ச்ரத்தையுடன் படித்துத் தேறினார்கள். வனஜாவுக்கு 13 வயதாகியது. மற்ற இருவருக்கும் முறையே வயதாகியது; அதற்குத் தகுந்த கல்வியும் அபிவ்ருத்தி யடைந்தது. வனஜாவின் வயதின் வளர்ச்சிக்குத் தக்க புத்தி வளர்ச்சியும், அதற்குத் துணையான எழில் வளர்ச்சியும், அதற்கு ஒற்றுப்போல சங்கீத வளர்ச்சியும், அதற்கு அனுகுணமான நற்குண நல்லொழுக்கமும் ஒன்றுகூடி ஜ்வலிக்கின்றது. அம்புஜாவையும் பங்கஜாவையும் தனது உடன்பிறந்த சகோதரிகளென்றே தீர்மானித்துக்கொண்டாள். தனது உபாத்தியாயினியம்மாளையே தனது தாயாகவும், கிழவனாரையே தனது பிதாவாகவும் எண்ணிவிட்டாள். கல்யாணியின் நினைவு அவளை விட்டு மறைந்துவிட்டது.

இவ்வித மிருக்கையில் அந்த பாடசாலையின் வருடக் கொண்டாட்ட தினம் வந்தது. அன்று ஆசிரமத்தினர் அனேக ஸ்ரீமான்களையும் ஸ்ரீமாட்டிகளையும் வரவழைத்து வருடாந்திரப் பத்திரம் படித்து அனேக அரிய உபன்னியாசங்கள் நடத்தி சங்கீதக் கச்சேரிகள் செய்து வெகு விமரிசையாக மங்களம் பாடி முடித்தார்கள். அங்கு சங்கீதம் பாடியவர்களில் நமது வனஜாவும் ஒருத்தி. அன்று அவள் தனது முழுவல்லமையை உபயோகித்து அங்குள்ள எல்லோரையும் பரவசமடையும் வண்ணம் பாடினாள். அங்கு கூடி யிருந்த மக்களில் வனஜாவினுடைய சங்கீதத்தில் ஈடுபட்டு ஆனந்திக்காதவர்களில்லை. அவள் பாடிய சங்கீதத்தின் அழகு ஒருபுற மிருக்க அவள் பாடும் க்ருதியின் அர்த்த பாவத்தை அவள் மனமார அன்வயித்துப் பாடும் திறமையைக் கண்ட எல்லோ

ருடைய மனத்திலும் ஆநந்த ஊற்று சுறந்துவிட்டது. "எந்துகுநிர்தய எவருன்னருரா?" என்ற கீர்த்தனத்தைத் தனது பரதேசித் தன்மையை விவரித்துக் காட்டுவதுபோலப் பாடினள். அந்த ஒரு கீர்த்தனத்தினலேயே ஜனங்கள் தடை கட்டிய நாகம் போலாய் விட்டார்கள். இடை இடையே பேஷ் பேஷ் என்ற கூக்குரலும் கரகோஷமும் உண்டாயின. மற்றும், ப்ரோசேவாரேவரே நினுவினு?" என்ற கீர்த்தனமும் இன்னும் சில கீர்த்தனங்களும் பாடினள். அவ்வமயம் அங்கு சீமான்கள் கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ஓர் யுவகன் வெகு உல்லாசமான மலர்ந்த முகத்துடன் வனஜாவின் எதிரில் வந்து நின்றுகொண்டு சற்று உரத்த குரலில் பேசத் தொடங்கி, "ஆச்ரமத்தலைவரே! இன்று இத் திருவிழாவில் எமது செவிக்குப் பலவிதமான விருந்துகளை யளித்து எம்மைக் களிப்பித்ததுடன் இம் மாதரசியின் சங்கீத கானத்தை யோர் பேரானந்த தேவேந்திரப் பதவி போலும், தேவாம்ருத விருந்து போலும் அளித்து எமது உள்ளத்தை மகிழ்வித்ததற்காகத் தங்களுக்கும் சபையோருக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இச் சங்கீதத்தினல் எமது மனத்தை விகசித மடையச் செய்த இம் மங்கையர் மாமணிக்கு எதைப் பரிசாகக் கொடுத்தாலும் அது ஈடாகமாட்டாது. எனினும் எனது மனத்தின் ஆநந்தப் பெருக்கினல் ஏதோ சொல்ப தொகையைப் பரிசாக அளிப்பதை அங்கீகரிக்கவேண்டும்" என்று கூறியவாறு 500 ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து வனஜாவின் முன் நீட்டி "அம்மணி! இதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறினன்.

நமது வனஜா இந்த யுவகனின் ப்ரசங்கத்தையும் அவன் தனக்குப் பரிசு அளிக்க வந்ததையும் எண்ணி சற்றும் மனம் சகியாதவளாய்அவன் கொடுக்கவந்த 500 ரூபாயை ஒரு த்ருணமாக மதித்து அதைத் திரும்பிப் பாராது, சடக்கென்று எழுந்து தனது உபாத்தியாயினியின் பக்கத்தில் சென்று நின்றுகொண்டு சற்றும் தியங்காது துணிபுடன் பேசத் தொடங்கி "ஐயா! பணத்தைப் பையில் வைத்துக்கொண்டு நற்குணத்துடன் வீடு செல்லலாம்." என்றாள்.

இந்த அதி யாச்சரியமான செய்கையையும் மொழியையும் கண்டு சபையிலுள்ள எல்லோரும் பரமாச்சரிய மடைந்து வனஜா வின் உத்தமமான குணத்திற்கும், உயரிய போக்கிற்கும் மெச்சிக் கொண்டாடினர்கள். அவ் வார்த்தையைக் கேட்ட அவ்வாலிபனின் முகத்தில் அவமானம் தாண்டவமாடுகின்றது; தலைகுனிந்து விட்டது. இன்னது செய்வதென்று தெரியவில்லை. வனஜாவை ஏற இறங்க இருமுறை நோக்கினன்; அவன் நின்ற விடத்தை விட்டு அசையாது கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

---

## 12-வது அதிகாரம்.

### மலைத்திடும் சேய்தி — தலைவியின் துயரம்

தனது வாயினின்று வரும் விருத்தாந்தத்தை யறிய ஆவ லுடன் எதிர்பார்க்கும் எல்லோரையும் கண்ட யோகீச்வரர் சற்று சமாளித்துகொண்டு பேசத் தொடங்கினர். "எனதன்பீர்காள்! என் னுடைய சரிதையைக் கேட்க உங்களுக்கு ஆச்சரியத்தையும் அரு வருப்பையும், அத்ருப்தியையும் கொடுக்கு மென்பது எனது உறுதியான எண்ணம். எனினும் பகவத் பக்தியொன்றை மட்டும் செய்தால், எவ்விதமும் முக்தி படையலாம் என்கிற ஓர் அநுபவத் தைக் கிரகித்துக்கொள்ளுங்கள். என்னுடைய ஜனன பூமி வட தேசம். எனக்கு எனது பிதா ஆதி முதல் அக்ஷராப்பாசம் செய்த முறையாவது;—தினம் ஒன்றுக்கு 10 ரூபாய்க்குக் குறையாது எவ் விதமேனும் திருடித்தரவேண்டும்; அவ்விதம் கொடுத்தால் மட்டும் உணவு கொடுக்க முடியும். இல்லையேல் கம்பத்துடன் சேர்த்துப் பிணைத்து 100 அடி அடித்துவிடுவேன்." என்று முதல் முதல் ஆரம்பப் பாடம் கற்றுக்கொடுத்தார். எனது இளமைப்பிராயத்தில் எனக்கு நன்மை தீமை தெரியாமல் பிதாவின் மனத்தைச் சந்தோட முறச் செய்யவேண்டு மென்ற எண்ணங்கொண்டு தினம் காலை முதல் மாலை வரையில் எத்தகைய விதத்தில் கொள்ளையிட வியலுமோ அத்தகைய விதமெல்லாம் கொள்ளையிட்டு பொருள்

திட்டிக்கொண்டு அதை என் பிதாவிடத்தில் கொடுத்து மகிழ்வேன். ஆயின் எனது தாயார் மட்டும் யான் இவ்வித தொழில் செய்வதில் சற்றும் மனச் சம்மத மற்றவளாய் என்னைச் சதா கடிந்துகொண்டு திட்டுவாள். "அவ்விதம் திருட்டுத் தொழில் புரியாதே! உன் தந்தை சொல் கேளாதே! களவாடிக் களிப்பதை விடப் பிச்சை வாங்கி புசித்து மகிழலாம். பாபத்தைச் செய்யும்படியாகத் தூண்டும் தந்தையின் சொல்லைக் கேட்பதைவிட நல்வழியில் உன் காலத்தைப் போக்கி தந்தையின் சொல்லைப் புறக்கணித்துவிடு. கடவுள் உன் செயலுக்குத் தண்டியாமலிரார். அவர் உன் திருட்டைப் பார்த்துக் கொண்டே தானிருக்கிறார். அவர் எங்கும் ஒளிரும் மங்கள ரூப முடையவர். நீ இனி களவாடாதே! கர்மத்தைச் செய்யாதே!" என்று பலவிதத்தில் புத்தி கூறியும் எனது புத்திக்கு அவை எட்டாது வியர்த்தமாகிவிட்டன. என் தாயார் நித்திரை செய்யும் பொழுது அவளுடைய தேகத்திலிருந்த சொல்பநகைகளையும் கள்ளன்போல அபகரித்துத் தந்தையிடம் சேர்த்தேன். அது என் தாயின் உடமை என்பது தந்தைக்கும் தெரியாது. பிறகு தெரிந்து கொண்டார். எனது சாமர்த்தியத்தைப் புகழ்ந்து கொண்டாடினர். பிறகு யான் ஓர் பெரிய மனிதன் வீட்டில் திருடிய காலத்தில் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டேன்; என்னைப் பிடித்துத் தண்டித்துவிட்டார்கள். எனக்கு 2 வருடம் காவல் தண்டனை கிடைத்தது. அவ்விரண்டு வருடங்கள் கழித்து வெளிப் போந்தேன். அப்போதும் எனக்கு நற் புத்தி பிறக்கவில்லை. பின்னும் எனது பழய வேலையைக் கையாளத் தொடங்கினேன். பகல் கொள்ளை, இரவு கன்னம் முதலியன வெல்லாம் பழக்கமாயிற்று. அதோடு பல தினுசு வேஷங்கள் போட்டுக்கொண்டு ஏமாற்றி மோசமாக பொருளைப் பறித்தேன். பொருள் பறிக்கப் பறிக்க அந்த வழியில் என் மனம் மிகுந்த சந்தோடத்தையும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அடைந்தது. எனக்குக் களவாடுவதிலேயே நாட்டம் அதிகரித்துவிட்டது. எனக்கு உதவிக்குக் கூட்டாளிகளையும் சிலரைச் சேர்த்துக்கொண்டேன். ஒருவர் கையிலும் அகப்படாமல் வெகு திறமையுடன் களவாடி வந்தேன். பணத்திற்காக பிறருக்குத் தீங்கிழைக்கவும் துணிந்து முற்பட்டு விட்டேன். கொலை முதலிய

வும் செய்துவந்தேன். எனது தாயார் என்னுடைய செய்கையைக் கண்டுச் சகிக்காது உயிரை விட்டுவிட்டாள். அந்தம்மாள் இறந்தது எனக்குமெத்த சந்தோடம் உண்டாக்கிவிட்டது. என் பிதா என்னால் களிப்புற்றது கணக்கிடற் பாலது. அந்த காலத்தில் எனக்கு வயது 17 ஆயிற்று. அப்போது தாசி வீடு நுழையலானேன்; ஆனால் தாசிகளுக்கு யான் ஒரு பைசா கொடுத்தவனன்று. அங்கு சென்று அவர்களுக்கு ஆயிரம் இரண்டாயிரம் கொடுப்பதாகப் பேசி தளுக்கு செய்து உல்லாசமாக இருந்து அவள் நித்திரை செய்கையில் அங்குள்ள பொருள்களை கிடைத்தவளவு சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டி விடுவது வழக்கம். இவ்விதமே பல தாசிகளை ஏமாற்றி பொருளைப் பறித்துவிட்டேன். கடைசியில் ஓர் தாசியின் வீட்டிலிருந்து வெளியேறும் சமயம் தற்செயலாக வேலைக்காரனிடம் அகப்பட்டுக்கொண்டேன். அந்த விஷயமாக யான் தண்டனையடைந்த காலத்தில் இதற்கு முன்னால் செய்த குற்றங்களெல்லாம் வெளியாகிவிட்டன. அவ்வாறு வெளியாகிவிட்டபடியால் 10 வருஷம் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு சென்று சிறைவாசம் செய்தேன். அப்போது என்னால் தாங்கக்கூடாத கஷ்டமான வேலைகளையெல்லாம் செய்யும்படியாக உபத்திரவம் செய்து வேலை வாங்கினார்கள். அந்த கஷ்டத்தைச் சகிக்கமாட்டாது துடித்தேன். அப்போதும் எனக்கு நற்புத்தி பிறக்கவில்லை. அங்கு என்னுடன் கூட சிறையிருந்த கள்ளனை என் வசம் செய்து கொண்டு இருவரும் வேலை செய்துகொண்டிருக்கையில் மோசத்தனமாகத் தப்பித்துக்கொண்டு ஓடி வந்துவிட்டோம். அவ்வாறு வெளியேறிய யாங்கள் எங்கள் உருவத்தை மாற்றி ஓர் சாதுபோல உடை தரித்துக்கொண்டு மீண்டும் எங்கள் தொழிலையே செய்து வரத் தொடங்கினோம். என் பிதாவுக்கு என்மீதுள்ள ஆசைக்கு அளவே இல்லை; அவர் என்னைக் கடவுளாக மதித்து வந்தார். இவ்விதமே யான் காவி யுடையிலும் தீக்ஷையிலும் மறைந்திருந்து பல தீமைகளையும் செய்து வருகையில் ஒருசமயம் ஓர் பெண் விஷயமாக நான் தலையிட்டதில் சச்சரவு உண்டாகிவிட்டது. அதி காரணம்பற்றி அப் பெண்ணின் தாயைக் கொலை செய்துவிட்டேன். அந்தோ! அவ்வமயம் அந்தப் பெண் வயிறெரிந்து என்னைத்

திட்டியதும், எனது நடத்தையைப் பற்றி தூஷித்து நன்மார்க்கமான புத்திமதிகளை எடுத்துக் கூறி என்னை இடித்துக் காட்டியதும் இன்னமும் என் மனத்தில் மறைந்து கிடக்கின்றன. இத்தனை வருடமாகக் கரையாத—மாறாத—என் மனம் என்னை யறியாமலேயே ஏதோ ஒருவிதமன மாறுதலையடைந்துவிட்டது. எனினும் யான் அவ்வமயம் அங்கு நின்றால் அகப்பட்டுக்கொள்வேன் என்பதையறிந்து அவ்விடம் விட்டு ஓடி மறைந்தேன். என் கையினால் கொலையுண்ட அம்மாது அந்த பெண்ணின் இளைய தாயாராம். அதை யான் பிறகேயறிந்தேன். அந்த கொலைக்குற்றம் அப்பெண்ணின்மீதே ஏற்பட்டுவிட்டது. அந்தப் பெண் உண்மையிலேயே மகா ரூபவதி. அவளுடைய அழகில் ஈடுபட்டுத்தான் யான் அவ்விடம் சென்றதே! வயது 18-நிரம்பப் பெறாத அப்பாவையின்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு அவள் சிறையிலிருப்பதை யறிந்து என்னுள்ளம் துடித்தது கொஞ்சமன்று. "ஐயோ! குற்றவாளி நாமிருக்க அப்பெண்மீது அனியாயமானகுற்றம் ஏற்பட்டுவிட்டதே! அவளுடையஉயிர் மாண்டுவிடுமே" என்ற எண்ணம் எனது பிறவியில் அன்றே உதித்தது. அதுவிஷயமாக யான் வெகுநேரம் சிந்தித்தேன். அப்போதுதான் யான் சுத்த பாபாத்மா என்றும், கள்ளன் என்றும், கொலைபாதகன் என்றும், சண்டாளன் என்றும் தெரிந்துகொள்ளும் சக்தி சிறிது பிறந்தது. என்னுடைய துர்க்ருத்யங்கள் முற்றும் என்னெதிரில் வந்து தாண்டவமாடத்தொடங்கின. யான் எத்தனை கொலை செய்தேனோ அத்தனை கொலையுண்ட மனிதர்களின் உருவங்கள் எல்லாம் பைசாசமாக ஒன்றுகூடிவந்து என்னை ஈட்டியால் குத்தி சித்திரவதை செய்வதுபோலத் தோன்றிற்று. யான் எத்தனை மக்களின் வயிரெறியக் களவாடினேனோ அந்த மனிதரெல்லாம் என்னெதிரில் நின்று என்னைத் தாறுமாறாகச் சாபமிடுவதுபோல ஆய்விட்டது. மேற்குறித்த நிகழ்ச்சியால் எனது மனங் கலக்கமடைந்து உயிர் துடித்து மூளை சுழன்று நான் பித்தம்பிடித்தவன்போலவும் ஆய்விட்டேன். என்னையே நான் பார்த்துக்கொள்ளவும் சகிக்காத நிலைமையில் என் மனம் சுழன்றது. என்னிலைமையில் என்னைக் கண்ட பிறர் எனக்கு உன்மத்தம் பிடித்துவிட்டதென்று கட்டாயம் கூறுவார்கள். நான்

அதுபரியந்தம் செய்த கொலை, களவு முதலியன எல்லாவற்றையும் விட இந்த பெண் விஷயமாக நடந்த கொலையே கடைசியாயும் எனக்கு நற்புத்தியும் நற்காலமும் பிறக்கக்கூடியதாகவும் ஆய்விட்டது. அந்தப் பெண்ணின் பெயர் அம்மணி என்பதாகும். அம்மணியை மீண்டும் பார்க்க ஆசைகொண்டு எனது மறைந்த உடையுடன் எவ்வித பாடுகளை எல்லாம் பட்டு அவளிருக்கும் சிறைக்குச் சென்று பார்த்தேன். ஐயோ! அக்கோர சம்பவத்தைக்கூற எனது மனம் இப்போதும் கூசுகின்றது. அவளுடைய அழகிய வதனம் அழுகையில் மறைந்துபோய் தன்னிறையழிந்து, கோவெனக் கதறி புலம்பியவாறு அலங்கோலமாக விழுந்துகிடந்த காட்சியானது என் மனத்தை முற்றிலும் மாற்றி என்னை அடியோடு புனர் ஜென்மம் எடுத்தவன்போலப் புதுப்பித்து, என்னை தீய வழியினின்றும் திருப்பும் சக்கரமாக ஆய்விட்டது. என்னுடைய மனம் அவ்வமயமிருந்த நிலைமையை கடவுள்தானறிவார். "ஆகா! கொலைபாதகன் நாமிருக்க இந்தப் பெண் ஏன் மடியவேண்டும்? இவள் நிரபராதி; நான்தான் கொலைபாதகன் என்பதைக் கூறிவிடலாமா?" என்றும் எண்ணினேன். "விவகாரம் இவ்வளவு தூரம் வந்துவிட்டபிறகு இனிமேல் நாம் சொல்வதால் பரிகாசமாகவும், பயித்தியக்காரன் வார்த்தையைப்போலவும் தோன்றுமேயன்றிப் பலனடையமாட்டாது. என்ன செய்யலாம்?" என்று யோசனை செய்து புலம்பிய வண்ணம் நின்றுவிட்டேன். எனினும் அனியாயமாய் மடியும் இப்பெண்ணைக் காப்பாற்றவேண்டும் என்ற ஓர் வேட்கையும் பிடிவாதமும் உண்டாகிவிட்டது. அவ்வாறு உண்டாகியவுடனே யான் வெகு துணிபுடன் அந்தப்பெண்ணின் எதிரில் சென்றேன். என்னையவள் இன்னுனென்று அறிந்துகொள்ளாதவிதமாக யான் உடைதரித்திருப்பினும் அந்தப்பெண் எவ்விதமோ சாமர்த்தியமாக என்னை சடக்கென்று தெரிந்துகொண்டு அலறியழுது என்னைத்திட்ட வாரம்பித்தாள்.

இது கண்ட யான் அந்தப் பெண்ணை நோக்கி "அம்மணீ! யான் உன்னால் க்ருதார்த்தமடைந்தேன்; புனர் ஜென்மம் எடுத்தேன். எனது தீய பழக்கத்தை விட்டொழித்தேன். யான் தற்

போது வந்த காரணமாவது,—உன்னை எவ்விதமேனும் காப்பாற்றி உனது நிரபராதித் தன்மையை விளக்கிக் கூறிப் பின் எனது குற்றத்தை யான் ஒப்புக்கொள்வதற்கேதான். எனது மனம் முற்றும் மாறிவிட்டது. அம்மணி! விவகாரம் இவ்விதம் முடியும் என்று யான் கனவிலும் கருதவில்லை. உன் மீது பழி ஏற்படும் என்று யான் சிறிதும் எண்ணியவனன்று. அவ்விதம் எண்ணியிருப்பேனுகில் யான் அப்போதே அதற்குத் தகுந்த வழியில் வேலை செய்திருப்பேன். யான் எண்ணியது ஒன்று; காரியம் முடிந்தது ஒன்ருக ஆய்விட்டது. அம்மணி! யான் உன் இல்லம் தேடிவந்த காரணம் உனது அழகில் ஈடுபட்டு உன்னை யடைவதற்கேயாகும். என்னுடைய துர் எண்ணத்தை பகவான் கண்டு சகிக்காது தாறுமாருன கோர சம்பவங்களை யுண்டாக்கிவிட்டார். அம்மணி! யான் குற்றவாளி என்பதை யானே நேரில் தெரிவித்துக்கொள்ளவும் தயாராக வந்திருக்கிறேன். நீயும் உண்மையை ஒளியாது உரைத்துவிடு. இதோ! இப்போதே யான் கூறிவிடுகிறேன். யான் செய்த பாபமெல்லாம் என்னைச் சூழ்ந்திருப்பது போதும். நேருக்கு நேராக யான் செய்த குற்றத்திற்காக மற்ருெரு நிரபராதியான உயிருக்கு உலைவைக்க என் மனம் இடந்தரவில்லை. ஐயோ! இதுபரியந்தம் யான் இவ்விதம் நாசமடைந்து எனது பிறவி பாழாகிவிட்டதற்கு எனது தந்தையல்லவா காரணமாக ஆய்விட்டார்! ஆகா என்னரிய தாயார் கூறிய நன்மொழிகளெல்லாம் அப்போது நஞ்சாகவல்லவா மாறிவிட்டன! அதையறியும் சக்தியின்றி அரியமொழிகளை அகற்றிவிட்டுப் பாழும் நரகத்திற்குப் பங்குதாரியாகிவிட்டேனே!" என்று இன்னும் பற்பல யோசனைகளை எல்லாம் செய்து அவ்விடத்தையும் மனிதர்களையும் கூட மறந்து யான் புலம்பிவிட்டேன்.

எனது புலம்பலைக் கண்ட ஜெயிலிலுள்ள வேலைக்காரர்கள், அதிகாரிகள் எல்லோரும் வந்து "என்ன! என்ன!" என்று சூழ்ந்துகொண்டார்கள். எனது நிலைமையைக் கண்ட அந்தப் பெண்ணும் ப்ரமையடைந்து இன்னது செய்வதென்று அறியாது நின்றுவிட்டாள். வந்தவர்களை நோக்கி யான் கோவெனக் கதறியவாறு "ஐயா! இந்தப் பெண் நிரபராதி; நான்தான் அவள் மீது சாட்டப்

பட்டிருக்கும் கொலையைச்செய்த குற்றவாளி. என்னை தண்டியுங்கள் அந்தம்மாளை விட்டுவிடுங்கள். குற்றவாளி யானிருக்க நிரபராதியை தண்டிப்பது சட்டத்திற்கும் கடவுளுக்கும் சகிக்காத விரோதமாகாதா! நியாயத்தை நிரூபித்து நியாய வழியில் தீர்ப்பு கூறுவதற்காக நீதிபதியும் நீதிஸ்தலமும் இருக்கையில் குற்றவாளியை விடுத்து நிரபராதியை தண்டிப்பது தகுமா! அது நீதியாகுமா! இதோ! என்னைத்தண்டியுங்கள். என் குற்றத்தை யானே ஒப்புக்கொண்டேன்; அந்தம்மாளை விட்டுவிடுங்கள்." என்று யான் கத்திக்கூச்சலிட்டுக் கூறினேன். இதைக்கேட்ட அங்குக் கூடியிருந்த எல்லோருக்கும் என்னுடைய வேஷத்தின் மகிமையால் என் வார்த்தை முற்றும் பொய்யாகிவிட்டது. அதை யவர்கள் நம்பாது என்னை நோக்கி "ஐயா! சாதுக்களே! அந்தப் பெண்ணைக் காப்பாற்றி விடுதலை செய்வதற்காக நிரபராதியாகிய தாங்கள் தண்டனையடைவதுதான் நியாயமும் சட்டமும் ஆகுமா! அந்தப்பெண்ணே குற்றவாளி என்பதை நாங்கள் பலவிஷயங்களிலும் சந்தேகமறத் தகுந்த சாக்ஷிகளுடன் கண்டுபிடித்திருக்கையில் அவள் நிரபராதியாயும் தாங்கள் குற்றவாளியாயும் எவ்விதம் ஆகக்கூடும்? இதை யாரேனும் நம்பக்கூடுமா! தங்களைப் பார்த்தால் பரதேசி சாமியார்போலத் தோன்றுகின்றது. தங்களுடைய கருணைக் குணத்தைக் காட்டும்பொருட்டுத் தாங்கள் இவ்விதம் குற்றவாளிபோலப் பேசுகின்றீர்கள். தாங்கள் கூறிய வார்த்தையை நாங்கள் நம்பமாட்டோம். எங்களுக்கு கையும்மெய்யுமான குற்றவாளி எதிரிலிருக்க மற்ற விஷயங்களைக் கேட்பதே அனுவசியம். தாங்கள் வெளியில் செல்லலாம். இனி இங்கு நிற்கலாகாது." என்று கூறி எனது மறு பேச்சை எதிர் பார்க்காது என் கையைப் பிடித்து தடதடவென்று இழுத்துக்கொண்டு வெளியில் சென்றுவிட்டார்கள். யான் எத்தனை சொல்லியும் அவை பலிதமாகவில்லை. என் பேச்சை ஏதோ பயித்தியக்காரன் உளறுவது போலவே எண்ணிவிட்டார்கள். என் மனமோ அந்தப் பெண்ணைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணத்தினின்றும் மாறவில்லை. யான் எவ்வித முயற்சியாயினும் செய்து அவளைக் காப்பாற்றிவிடுவதென்று தீர்மானித்துவிட்டேன். அவ்வித தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், நான் தான்

குற்றவாளி என்பதை நிரூபிக்கும் பொருட்டும் இதற்கு முன் யான் செய்த பல குற்றங்களையும் எடுத்துரைத்து தண்டனை யடைந்த விவரங்களையும் தெளிவாகக் கூறினேன். முன்னர் நான் தண்டனை யடைந்த மாதம் தேதி முதலிய எதுவும் எனக்கு சரியாக நினைவு இல்லாமையால் யான் ஏதோ நினைவுக்கு வந்த நாளைக் குறித்துக் கூறினேன். கடைசியாக யான் சிறைக்குச் சென்று திரும்பிய பிறகு எந்த குற்றத்திலும் அகப்படவில்லையாதலால் அந்த நாளைக் குறிப்பாகக் கூறியதும் அவர்களில் சிலருக்கு சற்று யோசனை பிறந்து விட்டது. உடனே அவர்கள் என்னை ஜாக்கிரதையாகக் கவனிக்கத் தொடங்கினார்கள். நான் கூறியது முற்றும் உண்மைதானா என்பதை யறியும் பொருட்டு எல்லோரும் ஏதேதோ புத்தகங்களை யெல்லாம் புரட்டிப் பார்த்தார்கள். என்னுடைய கை கட்டை விரலின் அடையாளத்தை மசியினால் எடுத்து அதை எங்கேயோ அனுப்பி, யாருக்கோ தந்திகள் அடித்தார்கள். என்னை அந்த ஊர் சிறைச்சாலையில் அடைத்துவிட்டதுதான் எனக்குத் தெரியும். அவ்விதம் செய்தது எனக்கு மிகுந்த திருப்தியாக விருந்தது. யான் சிறைச்சாலையில் சற்றும் வருத்த மின்றி கடவுளின் நாமத்தை பஜனை செய்துகொண்டு உட்கார்ந்திருந்தேன். பிறகு மறுதினம் என்னைச் சிறையினின்றும் வெளியில் அழைத்துவந்து சுமார் பதினைந்து மனிதர்களின் முன்னிலையில் நிறுத்தினார்கள். அவர்களாக என்னைக் கேள்விகள் கேட்பதற்கு முன்னர் நானாக பேசத் தொடங்கி எனது பாலியத்தில் முதன் முதல் என்னை என் தந்தை களவாடும்படித் தூண்டி பயமுறுத்திக் கட்டளை யிட்டதுமுதல் அன்று வரையில் நடந்த சகல செய்திகளையும், எனது மதி அந்த மங்கையினால் திருந்தியதையும், நான் செய்த குற்றங்கள் முற்றும் தானாக செய்தவைகளல்ல வென்றும், தந்தையின் துர்ப்போதனையினால் செய்து வழக்கமாகிவிட்டதென்றும் அவ்விதம் செய்தவை எல்லாம் தப்பிதம் என்பதை யான் உணர்ந்து மிகுந்த வருத்தத்தை யடைந்து கலங்குவதையும் ஒன்று விடாது கூறிவிட்டேன்.

இதைக் கேட்ட எல்லோருக்கும் பரம ஆச்சரிய முண்டாகி விட்டது. 'ஆதி முதல் தீய பழக்கத்திலேயே பழகி வந்தவனுக்கு

தற்போது நன்மார்க்க சிந்தனை யுண்டாகி தனது குற்றங்களை யுணர்ந்து கலங்குவது மிகுந்த வியப்பை யளிக்கும் சம்பவமாக விருக்கிறது.' என்று ஆச்சரிய மடைந்து அவர்கள் யோசனை செய்தார்கள். 'அவன் தீய பழக்கத்திலிருந்து நன்மார்க்கத்தில் திரும்பிவிட்டபோதிலும் சட்டப்படி அவனுக்கு தண்டனை விதிப்பதைத் தவிர வேறு வழி கிடையாதென்றும், அதிலும் கொலை செய்ததற்காக மரண தண்டனை விதிப்பது தான் நீதி' என்றும் பேசிக்கொண்டார்கள். பிறகு அவர்கள் மேலதிகாரிகளுக்கு செய்தி யனுப்பி எல்லோரும் சேர்ந்து யோசனை செய்து கடைசியில் கூறிய தீர்ப்பாவது—இவன் களவு, கொலை முதலிய செய்த காலத்தி லிருந்த கெடுமதிகளெல்லாம் மாறுபட்டு நன்மதியுண்டாகி தனது மறைந்து பட்டொழிந்த குற்றங்கள் முற்றும் தானே யொப்புக்கொள்ளும் நிலைமைக்கு வந்து திருந்திவிட்டபடியால் இவனுக்கு மரண தண்டனை விதிக்காது ஆயுள் பரியந்தம் ஜெயில் வாஸம் பண்ணும் படியான தண்டனை விதித்தால் போதும்!' என்று தீர்ப்பு கூறி என்னை அடுத்த ஊர் ஜெயிலுக்கு மாற்றிவிட்டார்கள். அம்மணியை விடுதலை செய்துவிட்டார்கள்.

அம்மணி விடுதலை யடைந்து ஸ்வஸ்தமாக வீடு போய்ச் சேர்ந்துவிட்டாள் என்பதை யறிந்து என் மனம் அளவிலாத சந்தோஷத்தை யடைந்தது. எனினும் எனது மனத்தில் அம்மணியின் நினைவு ஒரு புறம் நிறைந்துக் கிடந்தது. கிடந்து பயனென்? எனது ஆயுள் காலம் முற்றும் சிறைவாசம் செய்யும்படியாக நேர்ந்து விட்ட பின் அம்மணியை எண்ணியதால் வரும் இன்பம் யாது? அந்தோ! கொலைபாதகனான என்னை அந்த மாதரசி அம்மணி மதிப்பாளா! மனத்தில் தான் எண்ணுவாளா! சீச்சீ! அவ் வெண்ணத்தைக் கட்டுடன் விட்டுவிடவேண்டும்." என்று என் மனத்தை யான் தேற்றிக்கொண்டு சதா பகவன்னாமாவைத் தவிர வேறு ஒன்றையும் இச்சியாது சமாதியில் மூழ்கினேன். எனக்கு இடும் வேலைகளைச் செய்துவிட்டு கடவுளைப் பஜித்துக்கொண்டே என் காலத்தைக் கடத்தினேன். இவ்விதமே சில வருடங்கள் சென்றன. என்னுடைய நடத்தையையும், நன்மதி பிறந்து நன்னெறி வழுவாது

நாணயமாக நடந்துகொள்ளும் தன்மையையும் கண்ட அதிகாரிகள் என்மீது ப்ரியங்கொண்டார்கள். பின்னும் சில வருடத்தில் என்னை முற்றும் நம்பி விடுதலை யடையச் செய்துவிட்டார்கள். யான் விடுதலை யடைந்ததும் நேரே அம்மணியின் வீட்டிற்குச் சென்றேன். அந்தோ! அவ்விடத்தில் கண்ட கோரசம்பவத்தை எண்ணிடில் இப்போதும் எனது மனம் துடிக்கின்றது; தபிக்கின்றது; அலை மோதுகின்றது. அவ் வீட்டின் முதல் கட்டு தாழ்வாரத்தை அடைந்தேன். அங்கு என்னுடைய மனம் நாடிய மங்கையின் உருவப் படம் பெரிதாக வரையப்பட்டு சுவரில் தொங்கவிடப் பட்டிருந்தது. அந்தோ! அதைக் கண்ணுற்றதும் என்னை யறியாது என் மனம் குழம்பி கண்ணீர் அருவிபோல ஓடத் தலைப்பட்டது. நான் ஓர் உன்மத்தனைப் போல அவ்விடத்திலேயே நின்று புலம்பலானேன். "ஆ! அம்மணீ! அம்மணீ!" என்று வாய் விட்டும் கூறி விட்டேன். யான் கூவிய தொனியைக் கேட்டு உள்ளிருந்து ஓர் கிழவி வெளிப் போந்தாள். அந்த கிழவி என்னைக் கண்டதும் எனது கோரமான வேஷத்தை உற்றுநோக்கிப் பின், "ஐயா! தாங்கள் யாரு? ஏன் இங்கு நின்று புலம்புகின்றீர்கள்? நீங்கள் யாரை நாடி வந்திருக்கின்றீர்கள்?" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட யான் சற்று என்னைத் தேற்றிக்கொண்டு "அம்மா! யான் யாரென்று கூறுவேன்? என்னையும் கடவுள் படைத்த மனித ராசியில் ஒருவனென்றே கூறுவார்கள். இவ் வீட்டில் அதோ அப் படத்திலிருக்கும் அம்மணீ என்ற மாதரசி எங்கிருக்கின்றாள்? அவளைக் காணவே யான் வந்துளேன். தயவு செய்து தெரிவிக்கவேண்டும்." என்று கேட்டேன்.

அதற்குக் கிழவி கண்ணீர் பெருக்கியவாறு "ஐயோ! அந்த வயிற்றெரிச்சலையும் கேட்கவேண்டுமா! அம்மணி யம்மாள் இம் மண்ணுலகை நீத்து விண்ணுலக மடைந்து வருடக் கணக்கிலாய் விட்டனவே! அவளுடைய அடையாளமாக ஓர் பெண் மகவை மட்டும் வைத்திருக்கின்றாள். இதோ அக் குழந்தையைக் கூப்பிடுகின்றேன் பாருங்கள்;" என்று கூறி "அம்மா! கமலாஸனி! கமலாஸனீ!" என்று கூவி யழைத்தாள். உடனே 5 வயது பாலகி—அழகிய

ஆரணங்கு—ஓடி வந்து நின்றது. ஆகா! அக் குழந்தை அம்மணியை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருந்தது. அதைக் கண்டதும் எனக்கு அம்மணியே எதிரில் நிற்பது போலாய்விட்டது. குழந்தையை வாரி எடுத்து முத்த மிட்டேன். அம்மணி இறந்த விசனந் தாங்காது கதறினேன்; முட்டிக்கொண்டேன்; குழந்தையைக் கொஞ்சிக் குலாவினேன். அம்மணி இறந்த விவரம் கேட்டேன். கிழவி சுருக்கமாகக் கூறியதாவது:—அம்மணி விடுதலை யடைந்து வந்த பின்னர், அந்த கிழவியின் தம்பியை மணம் செய்துகொண்டதாயும் பிறகு இப் பெண் குழந்தை பிறந்ததும் ஜன்னி கண்டு இறந்து விட்டதாயும் அவள் இறந்த விசனத்தினல் தனது தம்பியும் இறந்துவிட்டதாயும், இந்த அனுதையான குழந்தையை வைத்துக்கொண்டு தான் கஷ்டப்படுவதாயும் தெரிவித்தாள்.

இதைக் கேட்டு யான் பட்ட வருத்தம் கணக்கிட வியலாது. பிறகு அந்த கிழவியைத் தேற்றி "அம்மா! நீ வருந்தாதே; நான் அந்த அம்மணியம்மாளுக்கு உறவினனுக வேண்டும். குழந்தை முதல் எனக்கு அம்மணியின் நற்குணத்தின் பொருட்டு அவளிடத்தில் ப்ரியம் அதிகம். யான் தேச யாத்திரைக்குச் சென்று விட்டேன். இன்று தான் திரும்பி வந்ததும் அவளைக் காண வந்தேன். இந்த துக்ககரமான செய்தி முற்று மறிந்தேன். இனிமேல் இந்த குழந்தையும் நீயும் எனது சம்ரக்ஷணையில் இருங்கள். யான் எவ்விதமேனும் பாடுபட்டு உங்களைக் காப்பாற்றுகின்றேன்" என்று கூறினேன். அன்று முதலே யான் கூலிவேலையாயினும் செய்து குழந்தையைக் காப்பாற்றத் தீர்மானித்தேன். அவ்வூரில் உண்மையான யோக்யதையுடைய சாமியார் ஒருவரிடம் அண்டி யான் அவரிடம் எனது உண்மையான வரலாற்றைக் கூறிப் பின் எனக்கு உபதேசம் செய்யும்படியாக வேண்டிக்கொண்டேன். அவரும் நான் நன் மார்க்கத்தை யடைந்துவிட்டதை எண்ணி எனக்கு உபதேசம் செய்து யோகாப்யாசம், மந்திரம், தந்திரம், வயித்தியம் முதலியன கற்றுக்கொடுத்தார். யானும் ஓர் தனித்த மடத்தில் இருந்துகொண்டு மருத்துவம், மந்திரம் முதலியன செய்து குழந்தை கமலாலனியின் போஷணைக்காகப் பணம் சம்பாதித்தேன். எவ்வித பாடெல்லாம்

பட்டு குழந்தை கமலாஸனியை வெகு வாஞ்சையுடன் வளர்த்துக் கல்வியும் கற்றுவைத்தேன். அவளுக்கு தக்க வயதும் வந்தது. யான் அம்மணியை இச்சித்து அவள் இறந்துவிட்டபடியால் இனி மேல் விவாகம் வேண்டாமென்று தீர்மானித்துவிட்டேன். குழந்தை கமலாசனியின் சகல அம்சங்களுக்கும் தகுந்த வரனைத்தேடி மணம் செய்விக்க எண்ணி அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டேன். ஒரு நல்ல வரனைத் தேடி அவளை மணம் செய்து கொடுத்தேன். அவளுக்கு என் கையில் கிடைத்த ஸ்ரீதனமும் கொடுத்து புக்ககத் திற்கு அனுப்பினேன்.

கமலாஸனியை விட்டுப் பிரிந்து என்னால் 5 நிமிடமும் இருக் கக்கூடவில்லை. நான் வாரம் ஒருதரம் சென்று குழந்தையைப் பார்த்துவந்தேன். கமலாஸனியின் புக்ககத்தார் மிகுந்த துர்க்குண முடையவர்கள் என்பதை யான் பிறகு நாளாவட்டத்தில்தான் தெரிந்துகொண்டேன். அவர்கள் கமலாஸனியைத் துன்புறுத்தத் தலைப்பட்டார்கள். என்னை அவமதிக்கவும் அலக்ஷியமாகப் பேச வும் தொடங்கினார்கள். நான் அவர்கள் வீட்டிற்குச் சென்றால் என்னை நேருக்குநேர் வேஷக்கார சன்யாசி என்றும், கபட சன்யாசி என் றும், போலிப் பரதேசி என்றும் தூற்றுவதுடன் இனி நீ இந்த வீட் டிற்கு வரவேண்டாமென்றும் இன்னும் வாயில் வந்தவாறெல்லாம் திட்டினார்கள். ஆகா! ஆதியில் அம்மணியின் அமுத மொழிகளால் எனது துர்க்குணம் அகன்றதுபோல இவர்கள் கூறிய வசனத்தி னால் என் மனத்தில் ஒட்டிக்கொண்டிருந்த பாசம் அகன்று, தீர வைராக்யமும், வெறுப்பும், உலகப்பற்று அடியோடு ஒழியும் தன் மையும் உடனே உண்டாகிவிட்டன, நான் அவர்களால் உப தேசம் பெற்றதாக எண்ணினேன். அப்போது எனக்கு பட்டினத் தடிகளின் பாடலும், தாயுமானவர் பாடலும் நினைவிற்கு வந்தன. என் செல்வி கமலாஸனி அப்போது 4 மாதம் கர்ப்பவதியாக விருந் தாள். எனது அம்மணியின் அடையாளமாக அளித்த கமலாஸனி யையும் அறவே பிரியும் காலம் வந்துவிட்டதே என்று சற்று வருந் தியவாறு கடைசியாக கமலாஸனியைப் பார்த்துவிட்டுவரத் தீர்மா னித்து அவள் புருஷனை நோக்கி "இன்று ஒருதரம் மட்டும் என்

கமலாஸனியைப் பார்த்துவிட்டுச் செல்கிறேன். அதற்கு அனுமதிக்கவேண்டும்.'' என்று வேண்டிக்கொண்டேன்.

அப்போது கமலாஸனி தற்செயலாக அவ்விடம் வந்து என்னைக் கண்டுக் கதறினள். "தந்தையே!" என்றுதான் என்னை யவள் அழைப்பது வழக்கம். அவ்விதமே அழைத்துக் கண்ணீர் உதிர்த்தவாறு "ஆ! தந்தையே!" என்று மேலே சொல்லமாட்டாது வருந்தினள். இந்த கோர சம்பவத்தால் எனது மனமும் உருகி கண் வழியாக வழிந்தது. என்னை யான் சமாளித்துக்கொண்டு "அம்மா! கமலாஸனீ! இன்றுடன் உனக்கு மெனக்குமுள்ள சம்மந்தம் விட்டது. இனி நீ என்னை மறந்துவிடு. என்னை இறந்துவிட்டதாக எண்ணிவிடு. நீங்கள் எல்லோரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், தீர்க்காயுளுமாக விருந்தால் போதும். அதுவே எனக்கு சந்தோஷம். செல்வீ! கமலாஸனீ! உன் கர்ப்பத்திலுள்ள சிசு நல்ல சத்பாத்திரமாகப் பிறந்து நன்றாகவிருக்கவேண்டும். எல்லாம் வல்ல இறைவனருள் பூர்ணமாக வளரவேண்டுகிறேன். நான் சென்றுவருகிறேன்.'' என்று கூறிவிட்டு அவளுடைய பதிலை எதிர் பார்க்காது என் கையிலிருந்த பணப்பையை கமலாஸனியின் முன்னல் எறிந்துவிட்டு வந்துவிட்டேன். ஊரும் சதமல்ல என்ற பாடலையே பாடிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நேரே என் வாசஸ்தானத்திற்கு வந்தேன். கமலாஸனி புக்ககம் சென்றவுடனே அவளுடைய அத்தை இறந்துவிட்டாள்.

எனக்கு மனத்தில் எவ்வளவு விரக்தி இருந்தபோதிலும் என் கண்மணி கமலாஸனியின் நினைவுமட்டும் மறக்கக்கூடவில்லை. வெகு நாள் வரையில் அதே கவலையாய் இருந்தேன். அதனல் எனக்கு அவ்விடத்திலிருக்கச் சகியாமல் நிர்மானுஷ்யமான இடத்திலுள்ள பாழும் சத்திரத்தில் சென்று அங்கிருந்த மற்ற சாதுக்களுடன் என்காலத்தைக் கடத்தலானேன். அவ்விதமிருக்கும் நாளையில் தான் தயாநந்தர் என்ற நாமத்தை யுடைய இவர் இரு முறை வந்து பார்த்திருக்கிறார். நான் அங்கு சென்ற பிறகு என் கமலாஸனியின் செய்தி யொன்றுமே யறியமாட்டேன். அவளுடைய கருவிலிருந்த சிசு என்ன குழந்தையாகப் பிறந்ததோ முதலிய எதுவும்

இன்றுவரையில் அறியேன். கடவுளிடத்து பக்தியை செய்துக் கொண்டு நான் செய்த பாபங்களை எல்லாம் க்ஷமிக்கும் படியாக வேண்டிக்கொண்டு இருக்கிறேன். எனது ஜீவியத்தில் யான் சிறிது மகிழ்ச்சியடையும் படியான பாக்கியத்தைச் செய்தமையால் மகா பாபியும் கொலை பாதகனுமாகிய எனக்கு உங்களுடைய சகவாஸமும் சிநேகமும் கிடைத்தது. எனது சரிதை போதுமா! எனக்கு தற்போது வயது 90 ஆகிறது. எனது ஜனனகாலம் முதல் இன்றுவரையிலும் உள்ள சரிதையை விடாது கூறிவிட்டேன். என்னைப்பற்றி நீங்கள் எவ்விதம் நினைத்தாலும் நினைத்துக்கொள்ளலாம்" என்று யோகீச்வரர் மெல்ல திணறித்திணறிக் கூறி முடிக்குமுன்னர் இச் சரிதையைக் கேட்டுக்கொண்டேவந்த எல்லோருக்கும் மனத்தில் இன்னதென்று கூறவியலாதவிதமான தோற்றங்களுண்டாயின. தயாநந்தருக்குமட்டும் கமலாஸனியின் சரிதையைக் கூறத்தொடங்கியதுமுதல் கண்ணீர் ஓடவாரம்பித்தது. சரிதை முற்றுப் பெற்றவுடன் தயாநந்தர் யோகீச்வரரின் இரு கால்களையும் பிடித்துக் கொண்டு "யோகீச்வரரே! தாங்கள் அன்புடன் வளர்த்த கமலாஸனியின் கருவில் இருந்து ஜெனித்தவன் யானேயாவேன். என் தாயாரே தாங்கள் வளர்த்த கமலாஸனியாவள். என் பிதா அன்பின் முதிர்ச்சியினால் கமலாஸனியை நவநீதம் என்று அழைத்து வந்தார். இப்போது தாங்கள் தெரிவித்த கடைசி செய்திமுற்றும் அந்தம்மாளின் மூலம் நான் கேட்டிருக்கிறேன். எனது சிறிய பிராயத்திலேயே அந்தம்மாள் ஓர் பெண் குழந்தை யொன்றையும் பெற்று விட்டு உயிர் நீத்தார்கள். என் தாயாரை வளர்த்த மகாத்மாவா தாங்கள்! இதுகாறும் தங்களுடன் வருடக்கணக்கில் பழகியும் இன்னாரென்று தெரியாது போய்விட்டதே! என் தாயார் உயிருடனிருந்த நாள் முற்றும் தங்களை எண்ணி வருந்ாத நேரங்கிடையாது. அவ்விதம் வருந்துகையில் யான் காரணம் கேட்டேன்; எனக்கு சகலமும் கூறினார்கள். ஆகா! என் பாட்டனாரா தாங்கள்?" என்று கூறி மீண்டும் கண்ணீர்விட்டார்.

இந்த அதியத்புதமான செய்தியைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியக் கடலிலாழ்ந்தார்கள். அவர்களுடைய நிலைமை முற்றும்

கலங்கிவிட்டது. யோகீச்வரருக்கு கமலாஸனியின் புதல்வரே தயாநந்தர் என்பதை யறிந்ததும் பழய காலத்து எண்ணமெல்லாம் ஒன்றுகூடிவிட்டது. கோவெனக் கதறியழுது தயாநந்தரை நோக்கி "என் செல்வியின் சுதனே! கமலாஸனியின் மகனே! எனது அம்மணியின் அடையாளமான கமலாஸனியின் பரிசாக நீ இருப்பதை யறிந்து மனந்தேறினேன்; மகிழ்ந்தேன். ஏமவதியைப் பார்த்த அன்றே அவள் ஜாடை முற்றும் கமலாஸனியைப்போல விருக்கின்றதே என்று பிரமித்தேன். அது உண்மையானதாகவே ஆய்விட்டது. ஏமவதியைப்போலவே நவநீதமிருப்பதாலும் இருவரும் கமலாஸனியைப்போலவே இருப்பதாலும் எனது அபிமானம் அவர்களிடத்தில் அதிகரித்தது. ஆதியில் என்னைப்போல சண்டாளன் வேறு யாருமிருக்கமாட்டான். அந்திமத்தில் என்னைப்போல விரக்தியுள்ளவன் எவனும் அகப்படமாட்டான். எனது உயிர் நீங்கு முன்னர் என் கமலாஸனியின் வம்சத்தினர் நீங்களென்பதை யறிந்ததே எனக்கு மெத்த சந்தோஷமாயிற்று. இன்னும் எனக்குப் பேச வேண்டுமென்ற ஆசை இருக்கின்றது. ஆயின் பேசக்கூடவில்லை. ப்ராணன் கிளம்பும் தருணமாகிவிட்டது. என் அம்மணியினுடையதும், செல்வக் கமலாஸனியினுடையதுமான வம்சம் விளங்கியதைப்பற்றிப் பூரிக்கின்றேன்" என்றார். அதற்குமேல் அவரால் பேசக்கூடவில்லை; ஆயாஸம் மேலிட்டுவிட்டது; கண்ணை மூடிக்கொண்டு படுத்துவிட்டார்.

அவ்வாறே இரண்டு நாட்கள் கிடந்து மூன்றாவது நாள் அவர் உலகத்தை வெறுத்து உயிரை நீத்துவிட்டார். "யோகீச்வரரின் மரணகாலத்தில் அவருடையவரலாறு தெரிந்ததே! இதற்குமுன்பே தெரிந்திருக்கலாகாதா!" என்று சிந்தித்து வருந்தினார்கள். தயாநந்தர் கட்டுமீறிய துயரத்தால் வருந்தினார்; புலம்பினார். ஏமவதி, சிதம்பரம், நவநீதம், முத்துக்ருஷ்ணன் எல்லோரும் யோகீச்வரரின் மரணத்திற்கு விசனித்தார்கள். ஆதியில் அவர் துன்மார்க்கராக இருந்திருந்தபோதிலும் அவருடைய அந்திய காலத்தின் நன்மையை மட்டும் எடுத்துக்கொண்டு வருந்தினார்கள். க்ரமப்படிக்கு சவத்தை கொட்டு முழக்குடன் அடக்கம் செய்துவிட்டார்கள்.

யோகீச்வரரின் மாணக்ரியைகளை வெகு சிறப்பாக நடத்தினார்கள். யோகீச்வரர் கூறிய செய்திகள் மட்டும் எல்லோருடைய நினைவிலும் நன்றாகப் பதிந்துவிட்டன. அந்த வரலாற்றையே அடிக்கடி எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இவ்விதம் சில தினங்களாயின. நவநீதமும் முத்துக்ருஷ்ண னும் தாய், தந்தை, தாத்தா முதலியோரிடத்தில் உத்திரவு பெற்றுக்கொண்டு தமது வீடுபோய்ச் சேர்ந்தார்கள். நவநீதத் திற்கு தனது மூத்தவளின் செய்தியை அங்கு சொல்வதற்கும் இல்லாத விதமாக யோகீச்வரரின் வரலாறும் மரணமும் நேர்ந்து விட்டதாலும், அவள் புருஷன் அதைப் பற்றிப் பேசவேண்டா மென்று சொல்லி யிருக்கிறபடியாலும் கல்யாணியின் விஷயமாக எதுவும் பேசுவதற்கே இல்லாது போய்விட்டது. நவநீதம் பதி சொல் கடவாத பாவையாகையால் கல்யாணியின் விஷயமாக அவள் புருஷனிடத்தில் எதுவும் கேட்காது தனக்குத் தெரிந்த மனிதர் களின் மூலம் பூடகமாகவே கல்யாணியின் இருப்பிடத்தை விசாரித்துக்கொண்டே இருந்தாள். இவளுக்குச் சரியான தகவல் கிடைக்கவில்லை. அந்த கவலை மட்டும் அவள் மனத்தில் ஒருபுறம் வேலை செய்துகொண்டே இருந்தது. அதோடு அதிரூபம் என்ற பெயரால் வந்த அநாமதேயக் கடிதத்தை யார் வரைந்திருப்பார்கள் என்ற எண்ணமும் ஒரு புறம் வருத்திக்கொண்டே இருந்தது. இவ்வித மிருக்கும் நாளில் நவநீதத்தின் சூழ்ச்சியால் பிடிபட்டக் கள்ளர் கூட்டத்தினர்களில் மற்றையோரும் பிடிபட்டுவிட்டார்கள் என்ற சந்தோஷச் செய்தி இவர்களுக்குத் தெரியவந்தது. வெகு நாளாக உபத்திரவம் செய்துகொண்டு வந்த கள்ளக் கூட்டத்தினரை அபாரமான சாமத்தியத்தினால் பிடித்துவிட்டதற்குப் போலீஸார் நவநீதத்திற்கு தங்க பதக்கம் பரிசளித்தார்கள்.

சில வருடங்கள் சென்றன. முத்துக்ருஷ்ணன் ஓர் கேஸ் நிமித்த மாக வெளியூருக்குச் செல்ல நேர்ந்தது. அக்காலத்தில் நவநீதம் தனி மையாக தன் வீட்டிலிருக்கப் பயந்தவளாய் தன் தாய் வீடுசென்றாள். முத்துக்ருஷ்ணன் ஒரு வாரத்தில் வருவதாகச் சொல்லிச் சென்றான். அவ்வாறே ஒரு வாரமும் சென்றதும் அவன் வரவில்லை; அவ்வாறு

வாராமையால் நவநீதத்திற்கும், ஏமாவதி, சிதம்பரம், தயாநந்தர் முதலியோருக்கும் மிகுந்த திகிலும் கலவரமும் உண்டாகிவிட்டது. நவநீதத்திற்கோ அபாரமான பல யோசனைகள் உண்டாகி மனங் குழம்ப வாரம்பித்துவிட்டது. நமது நாயகன் சொல்லிய கடவு மீறி இதுபரியந்தம் நடந்தது கிடையாதே! இந்த தடவை மட்டும் எக் காரணம் பற்றி வாராதிருக்கின்றாரோ தெரியவில்லையே! அவ்விதம் தங்கும்படியாக நேரிடின் உடனே செய்தி யனுப்புவாரே! இன்னும் ஒன்றும் தெரியவில்லையே!" என்று கலக்கத்தை யடைந்து இன்னது செய்வது என்பதை யறியாது தவிக்கின்றாள்.

---

## 13-வது அதிகாரம்.

## மேகத்தில் மறைந்த மதியம்

வனஜாவின் ஆணித்திறம் போன்ற வார்த்தையால் அவமான மடைந்து தலை குனிந்து நின்ற வாலிபன் திடீரென்று வனஜாவைக் கடுத்த பார்வையால் ஏற இறங்கப் பார்த்தான். இதற்குள் பாடசாலையில் பெருத்த கூக்குரலும் குழப்பமும் உண்டாகி விட்டது. சீமான்களில் சிலர் எழுந்து அவ் வாலிபனை நோக்கி "ஐயா! இத்தகைய கண்ணியம் பொருந்திய பாடசாலையில்—ஆசிரமத்தில்—உம்முடைய செய்கை மிகவும் கேவலமானதும் ஒழுங்கீனமானதுமாக விருக்கின்றது. பெண்களின் அபிவிருத்திக்கும், கல்வி முன்னேற்றத்திற்கும், அனாதைப் பெண்களின் பாதுகாப்பிற்கும், இன்னும் மற்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டும் நடைபெறும் இப் பாடசாலையில் நீர் இவ்விதம் செய்வதும் சொல்லியதும் சற்றும் நன்றாக வில்லை. உமக்கு சங்கீதத்தினிடத்தில் ப்ரிய மிருப்பது பற்றி சந்தோஷமே! அதைக் காட்டிக்கொள்ள வேண்டுமாயின் ஆசிரமத்தின் தலைவியினிடத்தில் உமது அபிப்பிராயத்தைக் கூறி உமது நன்கொடையை அவரிடமே செலுத்தி ஆசிரமத்தின் போஷணைக்காக வைத்துக்கொள்ளும்படியாகக் கொடுத்திருப்பீராயின் அச் செய்கை எத்தகைய கண்ணியமாக விருந்திருக்கும்? அதை விடுத்து இத்தகைய பெரிய சபையில்

தாங்கள் தனிமையாக அந்த மாதரசியினிடம் சென்று பேசுவதும் பரிசு கொடுப்பதும் கேவலம் ஹீனச் செய்கை யல்லவா! நீர் இவ் விதம் செய்வது ஆசிரமத்திற்கே ஓர் இழிவான அபிப்ராயத்தை விளைவிக்கு மல்லவா! இவைகளை சற்றும் யோசியாமல் நீர் செய் வதும் சொல்வதும் சற்றும் ஒழுங்காக வில்லை. இவ் வாசிரமத்தின் மேன்மையையும் கண்ணியத்தையும் நீர் அறியவில்லை போலும்! அந்தப் பெண்மணியின் இயற்கை குணத்துடன், ஆசிரமத்தின் பழக்கத்தினுல் எத்தகைய உன்னத குணத்தை யடைந்திருக்கிருள் என்பது அவளுடைய செய்கையினுலாவது அறிந்துகொள்ளும். இனிமேல் இத்தகைய இழிவான காரியத்தில் தலையிடாதேயும். அம்பலவாண முதலியாருடைய குமாரன் இத்தகைய இழிவான செய்கையைச் செய்தார் என்கிற பெயர் இந்த விடத்தோடு மறைந்து போகட்டும்; உம்முடைய தாயாரின் துர்க்குணத்தை நீரும் கையாள வேண்டாம். குடியில் பிறந்த பெண்ணையும், கணவனை ஈன்ற தாயாரையும் அடித்து விரட்டி வயிறெரிந்து மடியச் செய்த மாபாவி பெற்ற பிள்ளை யல்லவா நீர்! உமக்கும் அப் பழக்கமே தொடர்ந்து வருகின்றது போலும். ஏதோ அறியாமையால் செய்து விட்டதை இந்த ஆசிரமத்தினரும் இங்கு விஜயம் செய்துள் ளோரும் மன்னித்து விடுகின்றுர்கள். இனிமேல் இவ்விதமான செய்கையை மனத்திலும் எண்ணுதேயும். நாங்கள் உமது பிதா அம்பலவாண முதலியாருக்கு அறிமுகமானவர்களாகையால் இவ் வளவு தூரம் எடுத்துக் கூறினேம்; மரியாதையாய் விடு செல்ல லாம்." என்று சற்று ஆத்திரத்துடன் கூறினுர்கள்.

இவர்கள் எல்லோரும் ஒன்று கூடி கூறிய வார்த்தைகளாகிய அம்புகள் அம்பலவாணனின் மகன் சிவராமனின் தேகத்திலும் மனத்திலும் சுறுக்கென்று தைத்து அவன் மனத்திலுள்ள ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டன. அவனுடைய மீசை துடிக்கின்றது; ரத்தம் கொதிக்கின்றது. அனல் மத்தியிலிருப்பது போல வெதும்புகின்றது. கண்கள் கோவைப் பழத்தை நிகர்த்து விட்டன. அன்னிலைமையில் சிவராமன் வனஜாவை நோக்கி "அடி! மதம் பிடித்த மாதே! உனது அகம்பாவமும் ஆணவமும்

நிறைந்த மொழியாலன்றோ எனக்கு இத்தகைய அவமானம் சம்பவித்தது. உம்; இருக்கட்டும். ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்.'' என்று கூறிக்கொண்டே அவ்விடத்தில் நிற்காது வெகு வேகமாய் ஓடிவிட்டான்.

இத்த வார்த்தையை அவன் உரத்த குரலால் சொல்லாது சற்று முணு முணுத்தவாறு கூறியதாலும், வனஜாவின் செவிக்கு மட்டும் கேட்கும்படியாக அவளருகில் சென்று கூறியதாலும் அந்த மொழி வனஜாவின் செவிக்கும், அங்கு அருகிலிருந்த உபாத்தியாயினியின் செவிக்கும் மட்டும் சிறிது கேட்டது. அவ்வாறு கேட்டவுடனே இருவரும் நடுங்கி திடுக்கிட்டுவிட்டார்கள். உபாத்தியாயினி அந்த யுவகன் கூறிய வார்த்தையை அங்குள்ள ஏனையோரும் கேட்கும்படியாக உரத்துக் கூறிவிட்டாள். இதுகேட்ட சபையோர்களும் அடங்காத ஆத்திரமும், அந்த யுவகனிடத்தில் வெறுப்பும், சீற்றமும் கொண்டார்கள். எந்த நேரத்தில் வனஜாவுக்கு அந்த மூர்க்கன் என்னவிதமான தீங்குகளைச் சம்பவிக்கச் செய்வானோ என்கிற அச்சம் எல்லோருடைய மனத்திலும் புகுந்து கொண்டு வருத்தத் தலைப்பட்டது. வனஜாவின் நிலைமையை வர்ணிக்கவேண்டுமா! அந்த பாவை இடி யோசையைக் கேட்ட நாகம் போலாய் விட்டாள். அவளது மூளை சுழல வாரம்பித்தது, வனஜவல்லியின் நிலைமையைக் கண்டறிந்த மற்றையோர்கள் அவளுக்குத் தேறுதல் மொழிகளைக் கூறித் தேற்றினார்கள். பிறகு அங்கு வந்திருந்த சீமான்களும் சீமாட்டிகளும் உத்திரவு பெற்றுக் கொண்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள். சபையும் கலைந்தது. ஆசிரமத்தின் தலைவி வனஜவல்லியை நோக்கி "அம்மா! வனஜா! நீ எதற்கும் பயப்படாதே. ஆனால் தனிமையாக நீ ஒரு நிமிடமும் இருக்காதே. எந்த நேரத்திலும் உனது சிநேகிதையின் துணையுடனேயே இரு. உனக்கு இங்கிருப்பதனால் ஏதேனும் விபத்து சம்பவிக்கும் என்று தோன்றிப் பயமாகவிருந்தால் அதை உடனே தெரிவி. உன்னை இவ்விடத்திலிருந்து இதைச் சார்ந்த மற்றொரு கிளை ஆசிரமத்திற்கு மாற்றுகிறேன். அங்கு சவுக்கியமாக விருந்து வா! என்ன சொல்கிறாய்?'' என்றாள்.

இதுகேட்ட வனஜா "அம்மா! தாங்கள் என்னை எவ்விதம் நடத்தினாலும் அது எனக்கு மிகுந்த சந்தோஷத்தையே யளிக்கும். உங்களிஷ்டப்படியே செய்யுங்கள். எனக்கு ஒருவராலும் ஒருவித மான ஆபத்தும் நேராது பார்த்துக்கொள்ளவேண்டியது உங்கள் கடமை. அதைத் தான் யான் வேண்டிக்கொள்ளுகிறேன்." என்று வெகு பணிவுடனும், பயபக்தியுடனும் கூறினள்.

தலைவி :—அம்மா, வனஜா! உன்னை என்னருகிலேயே வைத்துக்கொள்வதுதான் உசிதமென்று தோன்றுகின்றது. ஆகையால் நீ பயமின்றி இவ்விடத்திலேயே இருந்துவிடு—என்று கூறி தன்னருகிலேயே வைத்துக்கொண்டாள். வனஜாவுக்கோ மனத்தில் ஏதோ திகில் பிடித்துக்கொண்டது. அவள் சரியானபடி நித்திரை கொள்ளாது புரளுகின்றாள். அவளுக்கு என்றும் உண்டாகாத புதிது புதிதுமானதும் பழய எண்ணங்களும் ஒன்றுகூடி அவளை வருத்தத்தொடங்கின. இதுகாறும் வனஜா தனது கல்வியின்மீதே மனம் சென்று லயித்திருந்து குதுகலத்தின் மீதே வளர்ந்துவிட்ட மங்கைநல்லாள்; இன்று தான் தான் யார் என்பதையும் எவ்விதம் ஜெனித்தோம் என்பதையும் அவளை யறியாது அவள் மனம் சிந்திக்கத் தொடங்கியது. "ஆகா! நாம் இது பரியந்தம் விசனம் இன்னதென்பதை யறியாது இருந்தோமே! நமது காலக்கொடுமையினால் இன்று ஏன் என்னை யறியாது இவ்விதமான துக்கம் என் தொண்டையை அடைக்கின்றதே! அந்தோ! அந்த வாலிபன் சொல்லிச்சென்ற மொழியும் பார்த்த பார்வையும் என்னை நடுங்கச்செய்கின்றதே! அவனால் நமக்கு ஒருவிதமான தீங்கும் நேராத வண்ணம் என்னைக் காப்பாற்றுவாய் என்னப்பனே! ஜகதீசா! என்னை இம்மண்ணுலகில் ஜெனிப்பித்திருக்கின்றாயே! அவ்வாறு என்னை ஜெனிப்பித்தது ஓர் தாய்தந்தையின் மூலமாகத் தானே இருந்திருக்கவேண்டும். உலகத்தில் சகல ஜீவராசிகளையும் அவ்விதம் படைத்துள்ளதை நோக்க என்னையும் அங்ஙனம் தான் படைத்திருப்பாய் என்று யூகிக்கவேண்டி யிருக்கின்றது. என்னை ஈன்ற மாதாபிதாக்கள் எவ்வாறு நானறியாதவிதம் மறைந்தார்களோ தெரியவில்லையே! எனது பிறவியில் யான் தாயென்றும்

தந்தை என்றும், தம்பிமார் தமையன் என்றும், உடன்பிறந்த சோதரி என்றும், உற்றார் உறவினர் என்றும் மக்கள் மனிதர் என்றும் கூறும் வசனத்தில் ஒன்றையேனும் கேட்டறிந்த தில்லையே! மண்ணுலகில் பிறந்தால் மக்களற்ற மாபாவியாய் என்னைப்போலப் பிறர் இருக்கின்றார்களா! எனது பிறவியே எனக்குத் தெரியாது வளரும் எனது ஜன்மமும் ஒரு ஜன்மமாகுமா! ஆகா! யானும் என் தாய்தந்தையரின் பாதுகாப்பில் இருந்தால் எனக்கு ஒருவராலும் ஒருவிதமான ஆபத்தும் நேராமலிருக்குமல்லவா! ஐயோ! எனது தாயாரும் தகப்பனும் இறந்தாபோய்விட்டார்கள்! அல்லது நான் தாய் வயிற்றில் பிறக்காது இவ்விதமே உற்பத்தியாகினேனு! ஒன்றும் தெரியவில்லையே!" என்று தனக்குள் எண்ணியவாறு மிகுந்த வருத்தத்துடன் புலம்பிக்கொண்டிருந்தாள்.

அங்கு சற்று தூரத்தில் படுத்துக்கொண்டிருந்த அவ்வாசிரமத்துள்ள லக்ஷ்மி என்னும் மாதரசி நமது வனஜா வருந்தி யழுவதை கவனித்துக்கொண்டே இருந்தாள். எக்காரணம் பற்றி வனஜா துயரப்படுகிறாள் என்பதையறிந்து அவளுக்குத்தேறுதலானமொழிகளைக் கூறவெண்ணி எழுந்து வனஜாவினருகில் வந்து அவளைத் தடவியவாறு அவள் பக்கலில் உட்கார்ந்துகொண்டு "அம்மா! வனஜவல்லி! எனக்கும் இன்று சரியானபடி நித்திரையே கொள்ளவில்லை. படுக்கையில் புரண்டுகொண்டேதான் கிடந்தேன். நீ வெகு நேரமாய் கண்ணீர்விட்டுக் கலங்குவதை யான் கவனித்துக்கொண்டே இருக்கிறேன். எனம்மா ஒரு நாளும் வருந்தாத நீ இன்று இவ்விதம் வருந்திக் கண் கலங்குகின்றாய்! அந்தப் போக்கிரிப்பயல் சொல்லிச்சென்ற வார்த்தைக்குப் பயந்தா இவ்விதம் துயரக்கடலில் ஆழ்ந்துவிட்டாய்? அதற்காக நீ சற்றும் கவலையே கொள்ளவேண்டாம். இங்குள்ள நாங்கள் எல்லோரும் உன்னைப் பார்த்துக்கொள்ளாது விட்டுவிடுவோமா! ஒருபோதும் உனக்குத் தீங்கு நேரும்படியாக தனிமையில் விட்டுச்செல்லோம். அதற்காக வருத்தமுறுவதாயின் விட்டொழி. மற்ற விஷயமாய் துயரப்படுவதாயின் அதைத் தெரிவித்தால் எம்மால் கூடியமட்டில் நிவர்த்திக்க வழி செய்கிறோம். புலம்பாதே வனஜா!" என்று வெகு கனிவான அன்புடன் மொழிந்தாள்.

இது கேட்ட வனஜா தன்பால் ஆசிரமத்திலுள்ள யாவரும் அபரிமிதமான அன்பு செலுத்துவதைக்கண்டு களிப்பெய்தியபோதிலும் தனது பிறவியின் வரலாற்றையறிய மிகுந்த ஆவலுள்ளவளாகிவிட்டாள். அந்த காரணத்தினாலேயே துக்கமதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அவளால் பேசவுங்கூடவில்லை. மெல்ல தன்னை சமாளித்துக்கொண்டு பேசத்தொடங்கி "அக்கா! என்பால் நீங்கள் எல்லோரும் கொண்டுள்ள அன்பை யானறியாதவளன்று, எனதுள்ளத்தில் அந்த ஒரு சந்தோடத்தினாலேயே என் உயிரும் நிலைத்து எனது கல்வியையும் பெருகச்செய்கின்றது. இதுபரியந்தம் யான் ஒரு விநாடிப்பொழுதும் கண்ணீர்விட்டுக் கலங்கியவளன்று. எனது நன்மைக்கோ அன்றி தீமைக்கோ என் மனத்தில் என்றும் கண்டறியாத புதிய விசனங்களெல்லாம் ஒன்றுகூடி வருத்துகின்றன. வருத்தத்தை முதலில் உண்டாக்கிய காரணகர்த்தா அந்த மாபாவியே யாவன். அவனுடைய மொழியால் திடுக்கிட்ட எனது உள்ளம் மறைந்து கிடந்தவற்றையும், யான் அறியாமலேயே கிடந்த விஷயங்களையும் என் நினைவிற்குக் கொணர்ந்துக் கதறச்செய்துவிட்டது. என் துயரத்தை என்னென்று விளம்புவேன்? லக்ஷ்மி! எனது பிறவியை எண்ணியே யான் கலங்குவது முக்கிய காரணமாகும். என்னைக் கடவுள் எவ்விதம் இம்மண்மீது சேர்ப்பித்தார் என்பதை யோசித்துப் பார்க்கின்றேன். எனக்கு விளங்கவில்லை. மண்ணுலகில் உதித்த அன்னோத்திலேயே மக்களை ஜெனிப்பித்த மாதா பிதாக்கள் என்ற பொருள் ஒன்று இருக்கவேண்டாமா! அவ்வித பொருளில்லாவிடினும் உலக முறைப்படியுள்ள இன்னும் மற்ற பந்து ஜனங்களில் ஒருவரேனும் எனக்கு இருக்கமாட்டாரா! எனது வளர்ப்புப் பாட்டனார் ஒருவரையும், அம்புஜா, பங்கஜா ஆகிய இருவரையும் ஆசிரமத்திலுள்ள மற்ற சகோதரிகள், தாய்மார்கள் ஆகியவர்களையும் தவிர யான் ஒருவரையும் கண்டதில்லையே! இவ்விதம் என்னைப்போலும் உலகத்தில் ஜனித்தவர்கள் உண்டா! எப்போதாவது, யார்மூலமாகவாவது இவ்வித அனாதைப் பிறவி இருந்ததாக நீ கேள்விப்பட்டதுண்டா! அந்தோ! எனது அனாதித்தன்மையை எண்ணினால் என்னையறியாது துக்கம் வருகின்றதே! யான் என்ன செய்வேன்? அதைத் தாங்கமாட்டாமல்தான் புலம்புகின்றேன்.

எனது பெற்றோரிருந்து என்னை வளர்த்து நானும் அவர்களுடைய பாதுகாப்பில் இருந்தால் என்னைக் கண்ட அயல் நாய்கள் வாய் திறக்குமா! அயோக்கியத்தன்மையுடன் பேசுமா! அந்த அல்பப்பதால் என்ன துன்பம் நேரிடுமோ என்கிற பயம் என் மனத்தைச் சூழுமா? இவைகளை எல்லாம் எண்ணியே என் மனம் தத்தளித்துத் தபிக்கின்றது. என்ன செய்வேன்?'' என்று மீண்டும் புலம்பினாள்.

இது கேட்ட லக்ஷ்மியும் வருத்தமடைந்து வனஜாவை அன்புடன் அணைத்துக்கொண்டு "என் அன்பான வனஜா! கண்ணீர் விடாதே! மறைந்துபட்டொழிந்த விஷயங்களை எல்லாம் எண்ணி வருந்துவதென்றால் அதற்கு அந்திமம் ஏற்படுமோ! உனது பிறவி மிகவும் விசனகரமானதுதான். அவரவர்களின் பிறவி அவரவர்களுக்கு மிகுந்த விசனமாகத்தான் தோன்றும். அதேபோல உனது பிறவியொருவிதம் விசனிக்கத்தக்கது. எனது பிறவியோ என் மனத்தைத்துளைத்து உருக்கிக்கொண்டே இருக்கின்றது, இதை எல்லாம் எண்ணி வருந்துவதென்றால் எந்தமட்டும் வருந்தினால் தீரும்! நான் ஆதியில் உன்னைப்போல நினைத்த நேரமெல்லாம் கதறுவேன்; துடிப்பேன்; தற்கொலை புரிந்துகொள்ளலாமா என்றும் எண்ணுவேன். பின்னர் என்னையே யான் தேற்றிக்கொண்டு எனது கல்வியில் கவனத்தைச் செலுத்தி பொழுதையோட்டி வருகிறேன். அதேபோல நீயும் உனது துன்பம் யாவற்றையும் மறந்துவிடு. அவற்றை நினைப்பதால் பலனில்லை. எல்லாவற்றிற்கும் கடவுள் ஒருவனிருக்கிறான். அவனை நம்பி இரு. இந்த தேறுதலைத் தவிர மற்ற எதை யான் கூறப்போகிறேன்.'' என்று கூறும்போதே லக்ஷ்மியின் கண்களில் முத்துருளவாரம்பித்தது.

இதைக்கேட்ட வனஜா லக்ஷ்மியின் சரிதையையும் கேட்க மிகுந்த ஆவல்கொண்டவளாய் அவளைநோக்கி "அக்கா! துயரப்பட்ட மனத்திற்கு மற்றொரு துயரமுள்ள விஷயத்தைக் கேட்டுத்தான் சமாதானம் ஆகவேண்டும் என்பதை நான் கேட்டிருக்கிறேன். அது தற்போது என் விஷயத்தில் மெய்யாகவே இருக்கின்றது. அக்கா! எனது விருப்பதை நிறைவேற்றும்பொருட்டு உனது

சரிதையை எனக்குரைக்கவேண்டும். அதனல் எனது வருத்தம் சற்று நீங்குமேயன்றி அதிகரிக்கமாட்டாது. ஆகையால் தடைகூறாது உனது சரிதையை யுரைத்து எனக்குத் தேறுதலளிப்பாய் என்று கெஞ்சிக் கேட்டாள். இதைக்கேட்ட லக்ஷ்மி விசனித்த வண்ணம் வனஜாவை நோக்கி "அம்மா, வனஜா! உனக்கு தற்போதுள்ள துயரம் போதாதென்று என்னையும் எனது சரிதையை யுரைக்கும்படிக்குக் கூறுகின்ருய். உம். என்னல் பிறருக்கு ஒருவிதமான உபகாரமில்லா விடினும் உபத்திரவம் தான் நேரும். நீ ஏன் கவலைப்படவேண்டும்? எனது பிதாவுக்கு என் தாயாரை விவாகம் செய்துவைத்த காலத்தில் என் பிதாவுடன் பிறந்த சகோதரர்களில் இருவரும் ஒரு சகோதரியும் இருந்தார்கள். எனது பிதாவின் சகோதரிக்குச் சமதையாக கொடிய நாகத்தையும் உபமானம்சொல்வதற் கில்லை. ஏனெனில் நாகத்தின் சிரசில் அழகிய மாணிக்கத்தை வைத்திருப்பதால் அதனிடமும் ஒரு விசேஷ மிருக்கின்றது. எனது அத்தை யாருக்கோ அவ்விதமாகக் கூறுவதற்கு ஒன்றையும் காணவில்லை. அவர்களின் பெயர் காந்தாரியம்மாள் என்பது அவர்களுக்கே தகுந்தது. அவர்களின் குணத்தை நான் விவரிக்கவேண்டாம். அது தானக வெளியாகிவிடும். அந்தம்மாளுக்கு மனேன்மணி யம்மாள் என்ற ஓர் பெண் உண்டு. "தாயைப் பார்த்து மகளைக்கொள்" என்கிற வசனத்தை அவ்விடத்திலேயே நிதர்சனமாகக் காணலாம். தாயார் குணத்திற்கு மகளின் குணம் தாழ்ந்ததல்ல. ஆனல் தாயைவிட மகள் இன்னும் சில அம்சங்களில் தேர்ச்சி யடைந்தவள் என்றே சொல்லலாம். ஏனெனில் கற்பென்னும் பொருளை தன்னிடம் விட்டு ஓட்டிய உத்தமி யவள். கற்பு என்னும் பூஷணம் இந்த அற்ப புத்தியுடையவளிடம் இருக்கலாகாதென்று அகன்று விட்டதாகத் தான் வைத்துக்கொள்வோமே! அவள் செய்த அக்ரமமும் கொடுமைகளும் எண்ணிலடங்காது. அந்தப் பாவி மகா சாதுவாகிய ஓர் உத்தமரை இரண்டாவது விவாகமாகச்செய்து கொண்டாள். அந்த உத்தமருக்கு மூத்த மனைவியின் புதல்வி பொருத்தியும், அனதையாக விருந்த ஒரு பையனைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு கல்வி கற்றுக் கொடுத்து தனது சொந்த மகன் போல வளர்த்து வந்த பையன் ஒருவனும் இருந்தார்களாம்.

(சிதம்பரத்தின் சரிதையைக் கூறி) அந்தப் பையனை இத்தகைய மதி சூனியத்திலிருந்து திருத்தி மேதாவியாக்கிய அவ் வுபாத்தியாயரின் சாமார்த்தியத்தைக் கூறவேண்டுமா! மகா யோக்யராம். அவரை அந்த அசத்துப் பாத்திரமாகிய மனோன்மணி என்னும் பைசாசம் பிடித்துக்கொண்டதுதான் தாமதம்; அவர்களுக்கெல்லாம் சனியன் பிடித்தது. அந்தப் பாதகி அவருடைய பெண்ணை வதைத்தது கொஞ்சமன்று. அந்த சிதம்பரத்தினிடம் காதல் கொண்டு அவனைச் சித்திரவதை செய்தனளாம். அவளுடைய இம்சையைத் தாங்கமாட்டாத அந்த உபாத்தியாயர் தன் மகளையும் மாணுக்கனையும் அழைத்துக்கொண்டு ஒளவை பிராட்டியார் தெரிவித்த

> பர்த்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
> எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
> ஏறு மாறாக விருப்பளே யாமாயிற்
> கூறாமற் சன்னியாசங் கோள்.

பாடலின்படி கூறாமல் சென்று சன்னியாசம் கொண்டுவிட்டதுடன் தனது மகளை மாணுக்கனுக்கே விவாகம் செய்துவிட்டனராம். இந்த சனியனை அவர் பிறகு மனத்தினாலும் நினைத்தவரன்றாம். அவர் செய்தி பிறகு ஒன்றும் தெரியவில்லை. அந்த உத்தமர் சென்றுவிட்ட பின்னர் இந்த மனோன்மணி காரணத்தைச் சரியாய்க் கூறாது மறைத்து தனக்கு ஏதோ தேக அசுகமென்று கூறிக்கொண்டு தாயும் மகளும் அவர்கள் தொலைந்தது நல்லதாயிற்று என்று எண்ணிக்கொண்டு எனது பெரிய தந்தையார் வீட்டிற்கு வந்து புகுந்துகொண்டனராம். என் பெரிய தந்தையாருக்கு மனைவி கிடையாது; மக்களும் கிடையாது. எனது பெரிய தந்தையாரும் ஸ்திரீலோலனும். அவருக்கு மனோன்மணி பக்குவமாகக் கிடைத்துவிட்டமையால் அவர்களை யவர் வீட்டோடு வைத்துக்கொண்டாராம். இந்த மனோன்மணியின் துரதிருஷ்ட வசத்தினால் எனது பெரிய தந்தையார் திடீரென்று உயிர் நீத்துவிட்டனராம். அவர் இறந்தவுடனே அவருடைய மிச்சமாகிய சொத்துக்களை என் தந்தையும் சிறிய தந்தையுமாகச் சென்று பகிர்ந்து

கொண்டு வந்துவிட்டார்களாம். மனோன்மணியின் நடத்தையை ஊர் முற்றும் தெரிந்துகொண்டார்களாம். அதுபற்றி என் பிதா இவளைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளப்பிரியப்படாதுவாளா விருந்து விட்டாராம். எனது சிறிய தந்தையை அதிர்ஷ்டவசமாய் அவ்வூரை விட்டு வெகு தூர தேசமாகிய லாகூருக்கு மாற்றி விட்டார்கள். அவர்களுடன் செல்வதற்கு எனது அத்தையும் மனோன்மணியும் எவ்வளவு முயற்சி செய்தும் எனது சிறிய தாயார் அவர்களை அழைத்துச் செல்லப் பிரியப்படாது தந்திரமாய் நிறுத்தி விட்டுப் போய்விட்டார்கள். சென்று சில மாதம் வரையில் மாதம் 10 ரூபாய் அனுப்பியதாகக் கேள்விப் பட்டேன். கண்டவர்கள் காரி யுமியும்படியான நிலைமையில் மனோன்மணி ஓர் நாடகக்காரனை நேசித்து அவனுடன் வசிக்கத் தொடங்கினளாம். அப்போது என் தாயார் என்னைக் கருப்பவதியாயிருந்தாளாம். பிறகு யான் பிறந்து எனக்கு ஐந்து வயது வரையில் என்னை என் மாதா பிதாக்கள் எவ்வளவோ செல்வமாய் வளர்த்து வந்தார்கள். என்னுடைய துரதிர்ஷ்ட வசத்தினால் என் தாய் தந்தையரிருவரும் ஒரு வருடத்திற்குள் உயிர் நீத்தார்கள். அந்தோ! அக் கால சம்பவம் என் மனக் கண் முன் இப்போதும் நிற்கின்றது. அவ்விருவரும் இறந்த தினமே என் அத்தையும் மனோன்மணியும் என் வீட்டில் வந்து புகுந்துகொண்டார்கள். பிறகு எனக்குற்ற வைபவத்தைக் கூற வேண்டுமோ? அந்த கிராதகி நாடகக்காரனை வீட்டுடன் கொண்டு வைத்துக்கொண்டதுடன் தினம் நாடகம் பார்ப்பதற்கு அவனுடன் சென்றுவிடுவாள். வீதிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு நான் தான் காவல் காக்கவேண்டும். தினந்தோறும் இந்த இம்சை என்னால் அனுபவிக்கக் கூடவில்லை. எனக்கு வேறு மக்கள் மனிதர்கள் எவருமில்லை. நான் பட்ட இம்சையை கடவுளே அறிவார். இவ்விதமே சில வருடங்கள் சென்றன. யான் புஷ்பவதி யானேன்; அதற்குப் பின்னர் உண்டான ஆபத்துக்கள் வாயினால் கூறத் தகுந்ததன்று. எனது உயிரினும் உயரிய கற்பையே பறிகொடுக்கக் கூடிய வழிகளில் என்னைப் புகுத்த முயற்சித்தாள். அவ்வாறு செய்யத் தொடங்கியதும் இனிமேல் 5 நிமிடமும் இந்த வீட்டி லிருக்கலாகா தென்று என் மனம் தீர்மானித்துவிட்டது. எங்கு செல்வது யாரிடம்

இருப்பது என்பதை எண்ணி வருந்தியது கடவுளே அறிவார். அவள் நாடகத்திற்குச் சென்று பார்ப்பதுடன் தானும் நாடகமாட ஆரம்பித்துவிட்டாள். என்னையும் ஆடவேண்டுமென்று இம்சை செய்தாள். அந்த நாடகக் கம்பெனியிலிருந்து இவளுக்கு வரும் சிநேகிதர்கள் அளவிடற்பாலது. அவர்களுக்கு இவள் செய்யும் மரியாதையைக் கூறமுடியாது. என்னையும் அதற்கெல்லாம் தூண்டுவாள். கையில் அகப்பட்டதை எல்லாம் எடுத்து என்னை அடிப்பாள். எதற்கும் யான் பேசாமடந்தையாகவே இருந்தேன். எனது மனோ வேதனையினால் உயிர் நீங்கிவிடுமெனக் கூறும்படியாய் மெலிந்துவிட்டேன். பிறகு என்னால் சகிக்கக் கூடாது உயிரையே விட்டுவிடத் தீர்மானித்தேன். அந்த பாதகி ஓர் தினம் நாடகத்திற்குச் சென்றிருக்கையில் நான் ஓர் கடித மெழுதி அவளுக்கு வைத்துவிட்டு துணியுடன் வீட்டை விட்டுக் கிளம்பி என் துயரந் தாங்காது புலம்பிக்கொண்டே கால் இழுத்துச் சென்ற விடமெல்லாம் சென்றேன். ஏதோ ஓர் ரயில் ஸ்டேஷனைக் கண்டு அங்கு கும்பலுடன் நானும் கலந்துகொண்டேன். அங்கு எல்லோருடனும் சாதாரணமாகப் பேசும் சமயத்தில் இந்த பாடசாலையைப் பற்றிய விஷயம் வெளியாயிற்று. இதைக் கேட்ட எனக்கு உடனே அந்த ஆசிரமத்திற்குச் சென்றுவிட வேண்டு மென்ற ஆவல் உண்டாயது. அவ்வாறு உண்டான ஆவலை படக்கிக்கொண்டு யான் அவர்களையே நோக்கி ஆசிரமமிருக்கு மிடத்தையும் அதன் விவரங்களையும் கேட்டுத் தெரிந்துகொண்டு என்னுடைய பரிதாபத்தை அவர்களிடம் கூறி என்னைப் ;பாடசாலையில் சேர்ப்பிக்கும்படியாய் வேண்டிக்கொண்டேன். அந்த புண்ணியாத்துமாக்கள் அப்படியே ஆகட்டு மென வாக்களித்து என்னை இந்த ஆசிரமத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து சேர்த்துவிட்டுப் போனார்கள். அன்று முதல் இன்று வரையில் ஆசிரமத்தலைவியே தாயாகவும், இங்குள்ள மற்றய பெண்களே சகோதரிகளாகவும் எண்ணி எனது விசனத்தை மறக்கக் கூடிய வகையில் மறந்து எனது மதியை மாசிலாக் கல்விமீது செலுத்தி படித்து வருகிறேன், ஆகா! நினைத்தாலும் என்னை என்னவோ செய்கிறது. என் தாய் தந்தையரையும் பறி கொடுத்து, எனது சகல ஐசுவரியங்களையும் பறி கொடுத்து, படாத இம்சைகளை

எல்லாம் பட்டு நானடைந்த துன்பத்திற்கு அளவு உண்டா! எனது விலைபிலாக் கற்பு யொன்றையேனும் நான் காப்பாற்றிக்கொண்டு வெளியேறும்படி கடவுள் அருள் செய்தாரே அதுவே எனக்குப் போதுமானது. என் அன்புள்ள வனஜா! நீ யொருவிதமான இம்சையும் துக்கமும் அனுபவிக்காது சுக ரூபியாய் சிறிய பிராய முதல் இங்கு வளர்ந்துவருகிறாய். இப்போது திடீரென்று உனது நினைவுக்கு எட்டாது மறைந்துகிடந்த விசனத்தை எல்லாம் வன் இழுத்துக்கொண்டு படுகிறாய்? வேண்டாம்; விசனிக்காதே! அந்தப் பயலால் உனக்கு ஒருவிதமான தீங்கும் நோவண்ணம் யாங்களெல்லோரும் பார்த்துக்கொள்கிறோம்; விசனிக்காதே!'' என்று கூறித்தேற்றினாள்.

லக்ஷ்மியினுடைய சரிதையைக் கேட்ட வனஜா தனது துயரத்தை சிறிது ஆற்றிக்கொண்டு அன்று இரவை யோட்டினாள். இவ்விதமே சில நாட்கள் சென்றன. வனஜாவை வளர்த்த கிழவரிடத்தில் வனஜா இங்கு நடந்த விஷயங்கள் ஒன்றையும் கூறவில்லை. கிழவர் வருத்தமுற்றுத் தவிப்பாரே என்ற எண்ணங்கொண்டே வாளாவிருந்துவிட்டாள். வழக்கம்போல கிழவர் இவர்களைப் பார்ப்பதற்காக வந்தார். அவரைக் கண்டதும் அம்புஜா, பங்கஜா, வனஜா ஆகிய மூவரும் ஓடோடியும் வந்து வணங்கிப் பின்னர்ப் பேசலானார்கள். கிழவர் அன்று கையில் ஓர் கடிதத்தைக் கொண்டு வந்திருந்தார். அவருடைய கையில் கடிதமிருப்பதை யறிந்த வனஜா கிழவரின் கையிலிருந்து கடிதத்தைத் தானே சடக்கென்று வாங்கிக்கொண்டு கிழவரை நோக்கி, "தாதா! இந்த கடிதத்தை நான் பார்க்கலாகுமா?'' என்று கேட்டாள்.

இதைக்கண்டு கிழவர் விசனித்த முகத்துடனும்—பார்வையுடனும்—பேசத்தொடங்கி, "அம்மா! வனஜா! அக்கடிதத்தை என் கையிலிருந்து எடுத்துக்கொண்ட பிறகு பார்க்கலாகுமா என்கிறாயே! அதை நீயும் உனது தலைவியும் பார்ப்பதற்கே யான் இங்கு கொணர்ந்தேன். அம்மா! என் செல்வி! உனது தலைவியைக் கூப்பிடு'' என்றார். இதைக்கேட்டதும் வனஜாவின் வயிற்றில் இடிவிழுந்ததுபோலாய் விட்டது. அவள் உள்ளே சென்று தன் தலைவியை அழைக்கவும்

சக்தியற்றவளாய்விட்டாள். அக்கடிதத்தில் என்ன செய்தி யிருக்கின்றதோ தெரியவில்லையே!" என்று சிந்தித்துக்கொண்டும் நடுங்கியவாறும் தனது தலைவியினிடம் சென்று தனது பாட்டனர் அழைப்பதாகத் தெரிவித்தாள். உடனே தலைவியும் எழுந்து வனஜாவுடன் சென்றாள். கிழவரைக்கண்ட தலைவி வழக்கம்போல விசாரித்துவிட்டு தன்னை யழைத்த செய்தி என்னவென்று கேட்டாள்.

இது கேட்ட கிழவர் சற்று விசனித்தவாறு வனஜாவிடமிருந்து வாங்கிக்கொண்ட கடிதத்தை எடுத்து தலைவியின் முன்பு நீட்டினர். அப்போது அவருடைய கண்களில் கண்ணீர் பெருகிற்று. அதைக் கண்ட வனஜாவும் தலைவியும் சற்று யோசனையுடன் கிழவரின் முகத்தையே உற்றுநோக்கினர்கள்.

கிழவர் :—ஆசிரமத்தலைவியே! என் செல்வி வனஜா! நீங்களிருவரும் என் முகத்தைப் பார்க்கும் காரணத்தை யான் கூறவேவேண்டுவதில்லை. தாங்கள் இக்கடிதத்தைப் படித்துப்பார்த்தால் யான் விசனப்படுவதற்குக் காரணந் தெரிந்துகொள்வீர்கள். ஆகையால் கடிதத்தைப் படியுங்கள்—என்றார். உடனே தலைவி அக்கடிதத்தைப் படிக்கலானள். அது பின்வருமாறு.—

"பெரியவரே! நீர் என்பால் செய்த பேருதவிக்கு யான் மிகவும் மகிழ்ச்சியடைந்து நன்றி பாராட்டுகிறேன். என்னைத் தாங்கள் இன்னர் என்பதை யறியாமலேயே தாங்கள் உதவி புரிந்தது மெத்தவும் பாராட்டத்தக்கது. அதாவது,—யான் இச்சித்து வைத்துக் கொண்டிருந்த மங்கையின் அன்பின் அடையாளமாகப் பிறந்த பெண்குழந்தையை நாங்களிருவரும் கண்ணின் மணிபோல வளர்த்துவந்தோம். என் காதலியின்பால் கொண்ட அன்பினல் அவள் விதவை என்பதையும் நான் கவனிக்காது எனது பூர்ண விசுவாசத்துடன் அவளை ஆதரித்தேன்; எனது செல்வக் குழந்தையை திடீரென்றுக் காணது போய்விட்டது. அன்று முதல் நாங்கள் தேடாதவிடம் பாக்கி இல்லை. போலீஸில் எழுதி வைத்தோம். ஒருவிதமான தகவலும் தெரியவில்லை. நாங்கள் வருந்தியது கொஞ்சமன்று. சமீபத்திலேயே, அக்குழந்தையைத்

தாங்கள் கண்டு எடுத்து ஆசிரமத்தில் படிக்கவைத்திருப்பதாயும் என் கண்மணிக்கு தற்போது வயதுவந்துவிட்டதென்றும் கேழ்வைப்பட்டு அளவிலா மகிழ்ச்சியை அடைந்தேன். என் குழந்தை க்ஷேமமாகவிருப்பது தங்களால் என்று யான் தெரிந்ததால் நன்றி செலுத்துகின்றேன். அக்குழந்தையைப் பிரிந்ததால் அக்குழந்தையின் தாயார் அதே விசனத்தினுல் உயிர் துறந்துவிட்டாள். அக்குழந்தை கைம்பெண் பெற்ற குழந்தை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அதன் தாயாரிறந்துவிட்டதால் அதற்கு இனி பாதுகாப்புப் பொறுப்பாளி யானே ஆய்விட்டேன். ஆகையால் இனி என் மகளை என்னிடத்தில் சேர்த்துவிட யாதொரு தடையும் செய்ய மாட்டீர்களென்று நம்புகிறேன். யான் நேரில் பகிரங்கமாக வந்து அழைப்பதற்கு சற்று யோசிக்கின்றேன். ஏனெனில் எனது காதலியின் விவரத்தைக் கூறும்படிக்கு நேரிடும். அதோடு தான் விதவையின் மகள் என்பதை யறியாதிருக்கும் குழந்தை அதை யறிந்தால் விசனிக்கக்கூடும். அதைக்கேட்ட ஆசிரமத்து மற்ற பெண்கள் அவளிடம் அருவருப்புக்கொள்வார்கள். எனது சொந்த மனைவியின் மகள் என்றுல் எனது பரம்பரையையும் மற்றய குடும்பத்து விஷயங்களையும் ஆசிரமத்துத் தலைவியோ, தாங்களோ, விசாரிக்க நேரிடுமாயின் அதனுல் எனக்கு பெருத்த கஷ்டமுண்டாகும்; பலவித கஷ்டமுண்டாகும். ஆதலால் எனது ரகஸியத்தை உங்களுக்கு எழுதுகிறேன். எனது மகளை என்னிடம் சேர்த்துவிடுங்கள். அப்படியதற்கு மறுத்தால் தாங்கள் என் மகளை பாலியத்திலேயே திருடிக்கொண்டுபோய்விட்டதாகக் குற்றம் சாட்டி தண்டிக்க ஏற்பாடு செய்வேன். உடனே மரியாதையாய் என் மகளை என்னிடம்சேர்ப்பிக்கத் தயாராகவிருங்கள். அவ்விதம் சேர்ப்பிக்கத்தியங்கினுல் தாங்கள் படும்பாட்டை ஈசனுமறியான். இந்த கடிதங்கண்ட 24 மணி நேரத்திற்குள் என் மகள் என்னிடம் இருக்கவேண்டும். இதோடு கொடுத்திருக்கும் விலாசத்திற்கு அழைத்துவந்து விட்டு விடுங்கள். அந்தப்பெண்ணை யான் எதற்கு அழைக்கவேண்டும் இங்குதான் படித்துக்கொண்டு வளரலாகாதாவென்று கேட்கலாம். ஆசிரமத்தின் பழக்கமும் நடவடிக்கைகளும் வாவா நிரம்பவும் கெட்டுவிட்டனவாம். பெண்களைப் பாதுகாப்பதாகக்கூறி அவர்களை

நாசஞ் செய்கிறார்களாம். என் மகளும் யாரிடமோ நட்புகொண்டு இருப்பதாகக் கேள்விபட்டதும் எனது ரத்தம் கொதிக்கின்றது. ஜாக்ரதை. என் மகளைக்கொண்டுவிடாது மறக்கப்போகிறீர்கள். உடனே அழைத்து வரவும்.

இப்படிக்கு நண்பன்.

இதைத் தலைவி உரத்துப் படிக்கவும் அதைக்கேட்ட வனஜா நெருப்பை மிதித்தவள்போலத் துடித்து "ஆ! யான் இதுபரியந்தம் எனது பிறவியின் வரலாற்றை அறியாது தவித்தேனே! கடைசியில் கைம்பெண் பெற்றச் சண்டாளியா யான்!" என்று கூறியவாறு மூர்ச்சித்துவிட்டாள். இதைப்படித்தத் தலைவியும் மகா உத்தமியான வனஜாவின்மீது பழி சுமத்தியதுடன் ஆசிரமத்திற்கே பெருத்த இழிவையுண்டாக்கும்படியாக வரைந்திருப்பதை நோக்கி ஆத்திரமும் அபாரமான ஆவேசமும்கொண்டு பல்லைக்கடித்தாள். "ஆகா! எந்த சண்டாளன் இவ்விதம் எனது மாசிலாத ஆசிரமத்தைத்தூற்ற முன் வந்தான்?" என்று கூறி கர்ஜனைசெய்து கோபத்தால் தாண்டவமாடுகிறாள். இதைப் பார்த்த மற்றய பெண்கள் எல்லாம் நடுக்கங்கொண்டு நின்றுவிட்டார்கள்.

182857

# சென்னை வர்த்தமானி

ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவருவது, சனி ஞாயிறில் வரும் தந்திகளோடு, அநேக அரிய வியாசங்களும், அயல் நாட்டு சம்பவங்களும் அடங்கப்பெற்றது. மாணவர்களுக்கு இன்றியமையாதது.

வருஷ சந்தா ரூ 3—0—0. 6 மாதத்திற்கு ரூ 1—12—0.

மானேஜர்,
அங்கப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

## "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்கராஜு
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரெக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்றுதான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும், கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை இடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

# அமிர்தாஞ்சனம்



எல்லா நோய்களுக்கும் திவ்ய ஔஷதம்

**40 வருஷங்களாக**

**“ஜகன்மோகினி” யாய் விளங்குவது**

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை அணா பத்து.

## அமிர்தாஞ்சன் டிபோ,

7, தம்புச்செட்டி வீதி, சென்னை.